# MIN ALAI
# மின் அலை

January 2023 Volume : 11 Issue 01 Price Rs. 21.00/- Ann. Sub. Rs. 250/-



வாரியத்துடன் 24.01.2023 அன்று நடைபெற்ற ஊதிய உயர்வு மற்றும் வேலைப்பளு ஒப்பந்த பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட சங்கப் பொறுப்பாளர்கள்



தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்
பதிவு எண் 124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)

தலைவர் பொர்.A.அந்தோணிபடோவராஜ்
பொதுச் செயலாளர் பொர்.V.S.சம்பத்குமார்
பொதுப் பொருளாளர் பொர்.G.கார்த்திகேயன்



2023 வருட புத்தாண்டை முன்னிட்டு நமது பொறியாளர் சங்க பொறுப்பாளர்கள் மரியாதை நிமித்தமாக **தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு** அவர்களை சந்தித்து வாழ்த்து கூறினர்



2023 வருட புத்தாண்டை முன்னிட்டு நமது பொறியாளர் சங்க பொறுப்பாளர்கள் மரியாதை நிமித்தமாக **இயக்குனர்/திட்டங்கள்** அவர்களை சந்தித்து வாழ்த்து கூறினர்



2023 வருட புத்தாண்டை முன்னிட்டு நமது பொறியாளர் சங்க பொறுப்பாளர்கள் மரியாதை நிமித்தமாக **இயக்குனர்/உற்பத்தி** அவர்களை சந்தித்து வாழ்த்து கூறினர்

ஆசிரியர்
பொர்.R.சந்தோஷ்குமார்
9962719617

## ஆசிரியர் குழு

பொர்.A.அந்தோணிபடோவராஜ்
பொர்.V.S.சம்பத்குமார்
பொர்.G.கார்த்திகேயன்
பொர்.N.R.செந்தில்
பொர்.R.K.நரசிம்மன்
பொர்.K.பிரபாகரன்

| Page | Contents |
|---|---|
| 09 | Wage Revision Proposal of Sangam |
| 17 | Board Orders |
| 24 | ஒழுங்கு நடவடிக்கை |
| 27 | அரசாங்கமும் வரிகளும் |
| 30 | கேள்வி பதில் |
| 32 | இயந்திரவியல் (Robotics) |
| 35 | தன்னம்பிக்கை |
| 36 | மனசே... ரிலாக்ஸ் ! |
| 38 | REC Limited |
| 41 | உடல்நலம் |

**TNEB ENGINEERS' SANGAM**
**Udangudi Building,**
**TNEB Complex,**
**144, Anna Salai,**
**Chennai - 600 002.**
**Ph : 2852 1968**
**No. 44, Ramasamy Garden Street,**
**Royapettah, Chennai - 600 014.**
**Ph : 2848 7517**
**E-mail : tnebes@yahoo.co.in**
**Web : www.tnebes.org**

**President : 9443872166**
**General Secretary : 9840956783**
**General Treasurer : 9841150516**

# மின் அலை

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்க செய்தி மலர்

மலர் 11 ஜனவரி 2023 இதழ் 01

## மாற்றங்கள்

மின்வாரிய ஊழியர்கள் வரலாற்றில் சந்தித்திராத இதுவரை சந்தித்திராத ஓர் அசாதாரணமான சூழலை நிர்வாகம் ஏற்படுத்தி வருகிறது. இதனை எதிர் கொள்ள வேண்டிய நெருக்கடி வாரியப் பணியாளர்களிடம் உள்ளது.

இதில் எவ்வித அறிவியல் சிந்தனையும் ஆய்வுமின்றி அறிவுப்பூர்வமான அணுகு முறையுமின்றி கண்மூடித்தனமாக மாற்றங்களை நிர்வாகம் திணித்து, பணிச்சூழலை சீரழித்து, பணியாளர்களுக்கு மன உளைச்சலையும் அமைதியின்மையையும் உருவாக்கியுள்ளது.

"மாற்றம் ஒன்றே மாறாதது," மாற்றங்கள் உருவாக பல காரணிகள் உள்ளன.

சுற்றுச்சூழல், புரட்சி, விஞ்ஞான வளர்ச்சி, நவீன மையம்... இவ்வண்ணம் பல காரணிகள்...

மாற்றங்களை ஏற்பவை செழிக்கும் என பொதுவான கருத்து உள்ளது. ஆயினும் ஆராயாமல் திணிக்கப்படும் மாற்றங்கள் வீழ்ச்சியை ஏற்படுத்துவது திண்ணம். நமது வாரியத்தில் விஞ்ஞான ரீதியான மாற்றங்களை எப்போதும் முதலில் ஏற்று முன் மாதிரியாக விளங்கி வந்தது வரலாறு. தற்போது வாரியத்தின் தேவைக்காக, வளர்ச்சிக்காக என சொல்லப்படும் மாற்றம், தனியார் முதலாளிகள் மேலும் கொழுத்திட ஏற்படுத்தபடுகிறது. சிறந்த தொழிலாளிகளை கொண்ட நிறுவனங்களே வளர்ச்சி அடைந்துள்ளது, இதுவே நம் வாரியத்திலும் அனுபவத்தில் கண்ட உண்மை.

ஒப்பந்தப்படி மூன்று ஆண்டுகளுக்கு முன் புதிய ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் முறையான பேச்சுவார்த்தையை கூட தொடங்காமல் இழுத்தடித்து வந்து, JAC வேலை நிறுத்தம் அறிவித்ததின் காரணமாக அவசரம் அவசரமாக பேச்சுவார்த்தையை தொடங்கியது. இரண்டு தடவை நடந்த பேச்சுவார்த்தைகள் கண்துடைப்பாகத் தான் நடத்தப்பட்டது.

கூடுதல் சிறப்பாக JAC யின் வேலை நிறுத்தத்தை தடுப்பதற்காக புதிய உத்தியாக மின்வாரியமானது JAC க்கு ஐந்து முன்வடிவுகளை வைத்துள்ளது.

மின்வாரியத்தின் தற்போதைய நிலை, ஊழியர்களின் தேவை, தமிழக மக்களுக்கான சேவை, தமிழக அரசின் எதிர்பார்ப்பு இவைகள் எதையுமே அறிவியல் பூர்வமாகவும் யதார்த்தமாகவும் ஆராயாமல் JAC போராட்டத்தை தடுக்க வேண்டியே இந்த முன்வடிவுகள் வைக்கப்பட்டுள்ளன.

தமிழக அரசின் நிலைப்பாடும், அரசியல் நிலைப்பாடும், உழைக்கும் வர்க்கத்தின் நிலைப்பாடும், பொதுமக்களின் நிலைப்பாடும், TNEB ஆனது பொதுத் துறையாகவே நீடிக்க வேண்டும் என்பதுதான். ஆனால் மின்வாரியம் பணிகளை Outsourcing விட முடிவெடுக்கிறது. Outsourcing என்பது மின்வாரியத்தை தனியார் மயமாக்குவது தான். காலியிடங்களை Outsourcing விட முன்னெடுப்பது தமிழக அரசு மின்வாரியத்தை தனியார் மயமாக்க விரும்புகிறது என்பதைத்தான் காட்டுகிறது.

மேலும் மின்வாரியத்தில் தேவையில்லாமல் இருக்கும் பணியிடங்களை ரத்து செய்ய மின்வாரியம் விரும்புவதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வேலைப்பளு ஒப்பந்தபடியும் தேவையின் அடிப்படையிலும் தான் பணியிடங்கள் உருவாக்கப்படுகின்றன என்பதை மின்வாரிய நிர்வாகம் வசதியாக மறந்துவிடுகிறது.

இதில் கவனிக்க வேண்டிய விஷயம், நித்தம் நித்தம் வளர்ந்து கொண்டிருக்கிற துறை, மின்சார துறையாகும். நேற்றைவிட இன்று வளர்ச்சி: இன்றை விட நாளை வளரும். இப்படியாக தினம் தினம் வளர்ந்து கொண்டிருக்கும் மின்வாரியத்தில் தேவையில்லாத பணிடங்கள் எப்படி இருக்கும்?

ஏனைய அரசுத் துறையில் இருந்து மின்வாரியத்தின் பணி மாறுபட்டது. மின்வாரியத்தின் உற்பத்தி நிலையங்களும் துணைமின் நிலையங்களும் 24 x 7 மணி நேரமும் இயங்கிக் கொண்டிருப்பவைகள். மின்வாரிய அலுவலகங்களின் கதவுகள் என்றுமே மூடப்பட்டதில்லை. தமிழ்நாட்டில் ஒரு ‘‘குண்டு பல்பு" எரிந்தால் அதற்காக மின்வாரியப்பணியாளர்கள் குறைந்தது ஆயிரம் பேர் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பொருள். இந்த சிறப்புத்தன்மை கருத்தில் கொண்டு தான் மின்வாரியப்பணியாளர்கள் ஊதிய நிர்ணயமும் அமைய வேண்டும்.

கடந்த காலங்களை விட தற்போது மின்வாரிய நிர்வாகம் பல நிலைப்பாடுகளில் பெரிய தலைகீழ் மாற்றங்களை கொண்டு வர முயற்சிப்பது என்பது கவலைக்குரியதாக உள்ளது.

அனுபவங்கள் பல பாடங்களை கற்றுத் தருகின்றன. தனிமனித துதி பாட கற்ற பாடங்களை மறந்து வீழ்ச்சிக்கு வழி வகுக்க துணிவது ஏன்?

எத்தனை எத்தனையோ அறைகூவல்கள் தோன்றுகின்றன. அவற்றை தாக்கப்பிடித்து நின்று, போராடி முன்னேற வேண்டிய கட்டாயம் உள்ளது. வளர்ச்சிக்கு உகந்த மாற்றங்கள் எப்போதும் தேவை. சென்ற காலத்தை விட எதிர்காலம் சிறப்புடையதாக இருக்கவேண்டும்.


வளர்ச்சியும் மாற்றமும் பொருந்திய திசையில் செல்ல வேண்டும். வளர்ச்சியும் மாற்றங்களுமே மேம்பாட்டுக்கு உந்துசக்திகள். ஒவ்வொரு நாளும் சென்ற காலத்திலிருந்து படிப்பினைகளை எடுத்துக்கொண்டு, எதிர்காலம் நோக்கி வீறு நடைபோட வேண்டும்.

தொழிலாளர் நலத்தையும், பணி தரத்தையும் உயர்த்தாத மாற்றகளால் என்ன பயன்? நிறுவனத்தில் ஏற்படும் மாற்றங்கள், மனிதவள வளர்ச்சியையும் பணிகள் மேற்கொள்ள நவீன இயந்திரங்களை தருவித்தும், பணி திறன் தரத்தை உயர்த்த உதவிடும் வண்ணம் அமையலாம்.

09.01.2023 மற்றும் 24.01.2023-ல் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் மின்வாரியத்தின் செயலற்ற தன்மையும், தெளிவான புரிதல் இன்மையும் வெளிப்படையாக தெரிந்தது. பொறியாளர் சங்கமானது JAC உடன் இணைந்தும் தனியாகவும் மின்வாரிய உயர்வுக்காகவும் ஊழியர்களின் நலனுக்காகவும் தமிழ்நாட்டு மண்ணின் தேவைக்காகவும் நல்ல பல திட்டங்களையும், ஆலோசனைகளையும் வாரியத்திடம் தெரிவித்துள்ளது. பொறியாளர் சங்கம் தன் உண்மையான பணியினை நேர்மையாகவும், உறுதியாகவும் எந்நிலையிலும் தொடரும்.

**செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
**செய்யாமை யானுங் கெடும்**

## பொதுச்செயலாளர் கடிதம்



அன்பு பொறியாளர்களே

வணக்கம்.....

தமிழ்நாடு மின்சார வாரிய அனைத்து தொழிற் சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு கூட்டம் ஜனவரி 3, 6 ஆகிய தினங்களில் நடைபெற்றது. 01.12.2019 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வு, வாரிய ஆணை எண் 2 ஐ முழுமையாக ரத்து செய்தல், உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பாக தொழிற்சங்கங்களால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த 10.1.2023 வேலை நிறுத்த போராட்டத்தின் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. பொறியாளர் சங்கத்தின் சார்பில் இந்த வேலை நிறுத்த போராட்டத்திற்கு முழுமையான ஆதரவை நல்குவது என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் வாரிய தரப்பிலிருந்து 09.01.23 அன்று காலை 11.00 மணிக்கு ஊதிய உயர்வு மற்றும் வேலை பளு ஒப்பந்த பேச்சு வார்த்தை நடைபெற உள்ளதாகவும், கலந்து கொள்ளுமாறும் அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. 09.01.23 அன்று காலை 12.00 மணிக்கு பின்னரே பேச்சுவார்த்தை துவங்கியது.

வாரிய தரப்பிலிருந்து எழுத்துப்பூர்வமாக எவ்வித முன் வடிவும் வழங்கப்படாமலேயே பேச்சுவார்த்தை நடைபெற்றது. அனைத்து தொழிற்சங்கத்தினரும் வேலை பளு மற்றும் ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை கமிட்டியில் தமிழக அரசின் உயர் அதிகாரிகள் இருவர் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளமைக்கு தங்களின் எதிர்ப்பினை வலுவாக பதிவு செய்தனர். வாரியத்தில் இதுவரை நடைபெற்றுள்ள எந்த ஒரு பேச்சு வார்த்தையிலும் இது போன்ற நிகழ்வுகள் இல்லை என்றும் இது அவசியமற்றது என்றும் நம் தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்டது வாரிய தரப்பில் 1. தமிழக அரசின் போக்குவரத்து துறைக்கு வழங்கப்பட்டது போல் தமிழக மின்சார வாரிய பணியாளர்களுக்கும் ஊதிய உயர்வு. 2. Outsourcing of posts. 3. நீண்ட காலமாக நிரப்பப்படாமல் காலியாக உள்ள பணியிடங்களை கண்டறிந்து குறைத்தல் 4. புதிதாக இனிவரும் காலங்களில் நியமிக்கப்பட உள்ள பணியாளர்களுக்கு அரசுத் துறைக்கு இணையான ஊதியம் மட்டும் நிர்ணயம் செய்தல் 4. Class I & II பொறியாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் ஊதிய உயர்வு இல்லை உள்ளிட்ட முன்மொழிவுகள் வாய் மொழியாகவே தெரிவிக்கப்பட்டன. அனைத்து தொழிற்சங்கங்களும் தங்களின் எதிர்ப்பினை பதிவு செய்த நிலையில் எழுத்துப்பூர்வமான முன் முடிவு வழங்கிட வலியுறுத்தினோம். பேச்சுவார்த்தை மாலை 06.30 மணிக்கு நிறைவுற்ற நிலையில் வாரியம் தொழிற்சங்கங்களின் வேண்டுகோளை ஏற்று 10.1.23 அன்று மாலை 7.00 மணிக்குள் வாரியத்தின் முன்மொழிவுனை வழங்குவதாக வேலைப்பளு மற்றும் ஊதிய உயர்வு கமிட்டியின் தலைவர் கடிதம் வாயிலாக தெரிவித்தார். இதனிடையில் சென்னை உயர்நீதிமன்றம் வேலை நிறுத்த போராட்டத்திற்கு நீதிமன்றம் 9.1.23 அன்று தடை விதித்தது. இதனைத் தொடர்ந்து 10.1.2023 அன்று நடைபெற திட்டமிடப்பட்டிருந்த வேலை நிறுத்த போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுவதாக கூட்டு நடவடிக்கை குழுவின் சார்பாக முடிவெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது.

10.01.23 அன்று இரவு 8.00 மணி அளவில் வாரியத்தின் முன் வடிவு அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் வழங்கப்பட்டது. இந்த முன் வடிவில்

1. இனிவரும் காலங்களில் புதிதாக நியமிக்கப்பட உள்ள பணியாளர்களுக்கு , அரசுத்துறைக்கு இணையான ஊதியம் மட்டும் நிர்ணயம் செய்தல்.

2. Implementing Outsourcing of posts.

3. தமிழக அரசின் போக்குவரத்து துறைக்கு வழங்கப்பட்டது போல் 5%சதம் வரை தொழிற் தகராறு சட்டத்தின் கீழ் வரும் மின்சார வாரிய பணியாளர்களுக்கு மட்டுமே ஊதிய உயர்வு வழங்கப்படும்.

4. தொழிற் தகராறு சட்டத்தின் கீழ் வராத Class I & II பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு,
தமிழக அரசின் ஊதியக்குழு பரிந்துரைகளின் படி மட்டுமே ஊதிய உயர்வு வழங்குவது.

5. நீண்ட காலமாக நிரப்பப்படாமல் காலியாக உள்ள பணியிடங்களை கண்டறிந்து குறைப்பது மற்றும் சீரமைப்பது.

ஆகிய கருத்துக்கள் மட்டுமே இடம்பெற்று இருந்தன. இந்த முன் முடிவு மின்வாரிய பணியாளர்களுக்கும் பொறியாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் மிகுந்த அதிர்ச்சியை அளித்தது. வாரியத்தின் முன்வடிவில் அறிவுப்பூர்வமான அணுகுமுறை இல்லை என்பதையே இந்த முன்வடிவு சுட்டி காட்டியது.

கூட்டு நடவடிக்கை குழுவின் ஆலோசனை கூட்டம் 12.1.2023 அன்று மீண்டும் நடைபெற்றது. கூட்டத்தில் வாரியத்தின் முன் வடிவு மற்றும் வேலை நிறுத்த போராட்டம் தொடர்பாக நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால தடை ஆகியவைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. மேற்கொள்ளப்பட வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்தும் நீண்ட ஆலோசனைகளுக்கு பின் முடிவெடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொறியாளர் சங்கத்தின் அவசர கால மையப் பொறுப்பாளர்கள் கூட்டம் காணொளி வாயிலாக 12.1.23 அன்று மாலை 6:30 மணிக்கு நடைபெற்றது கூட்டத்தில் வாரியத்தின் முன்மொழிவுகள் அதன் மீது நாம் எதிர்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. கூட்டு நடவடிக்கை குழு சார்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்குவது என்றும் பொதுச்செயலாளர் மேல் நடவடிக்கைகள் குறித்து முடிவெடுத்துக் கொள்ள அதிகாரம் வழங்கியும் மையப் பொறுப்பாளர்கள் கூட்டம் நிறைவு பெற்றது.

மீண்டும் வேலைப்பளு மற்றும் ஊதிய உயர்வு ஒப்பந்த பேச்சு வார்த்தைக்கு 24.1.23 மற்றும் 25.1.23 அன்று கலந்து கொள்ளுமாறு அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. பொறியாளர் சங்கத்திற்கு 24.1.23 அன்று நேரம் ஒதுக்கப்பட்டு அழைப்பு விடுக்கப்பட்டது. 24.1.23 அன்று நடைபெற்ற கூட்டத்தில் சங்கத்தின் சார்பில் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டிய தின் நியாயமான காரணங்களை தெளிவுர எடுத்துரைத்தும், Out Sourcing & Abolishing ஆகியவற்றை கடுமையாக ஆட்சேபித்தும், மின்வாரிய பணியாளர்களுக்கும் பொறியாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வின் அவசியத்தையும், மின்வாரிய பணிகளின் ஆபத்தையும் விரிவாக தெளிவாக எடுத்துரைத்தும், சங்கத்தின் சார்பில் ஆலோசனைகளுடன் முன்மொழிவாக கொடுக்கப்பட்டுள்ளது. சங்கத்தின் ஆலோசனைகளும் கோரிக்கைகளும் இந்த இதழிலும், நம் வலைப்பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இளநிலை பொறியாளர் மின்னியல் முதல் நிலை பதவி உயர்வுகள் தொடர்பான நீதிமன்ற வழக்குகள் தொடர்ந்து பட்டியலிடப்படுவதை உணர்ந்து வாரிய தலைவரிடத்திலும், தலைமை பொறியாளர்/ பணியமைப்பு அவர்களிடமும் 9.1.2023 மற்றும் 11.1.2023 ஆகிய தினங்களில் பதவி

உயர்வினை காலம் தாழ்த்தாது உடனடியாக வழங்கிட வலியுறுத்தப்பட்டது. கழகத்தின் உண்மை தன்மையற்ற முறனான முறையீடுகள் காரணமாக குழப்பம் ஏற்பட்ட போதும், தலைமை பொறியாளர்/ பணியமைப்பு மற்றும் துணை தலைமை பொறியாளர்/ பணியமைப்பு ஆகியோரை சந்தித்து நீதிமன்ற வழக்குகள், வழக்குகளின் தற்போதைய நிலை குறித்து விரிவாக எடுத்துரைத்து, உடனடியாக பதவி உயர்வுகளை வழங்கிட வலியுறுத்தினோம்.

பொறியாளர் சங்கத்தின் தொடர் முயற்சியின் பயனாக 13.1.23 அன்று 658 நபர்களுக்கு இளநிலை பொறியாளர் முதல் நிலை பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. அதில் 580 பொறியாளர்களுக்கு பணியிடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்தப் பதவி உயர்வினை விரைந்து வழங்கிட உதவியாய் இருந்த பணியமைப்பு நிர்வாகத்திற்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

பதவி உயர்வு பெற்று புதிய பொறுப்பினை ஏற்றுள்ள அனைத்து பொறியாளர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு, புதிய பணியிடங்களிலே சிறப்பாய் பணியாற்றிட வேண்டுகிறேன். பதவி உயர்வு பெற்ற பொறியாளர்கள் அனைவரும், இந்த பதவி உயர்வுகளில் உள்ள நீதிமன்ற வழக்குகள், அதை சங்கம் எதிர்கொள்ள தேவையான நிதி ஆகியவற்றை மனதில் கொண்டு, பதவி உயர்வு நன்கொடையினை உடன் அளித்திடமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

நமது தொடர்ச்சியான முறையீடுகளின் பயனாக 15 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியுள்ள இளநிலை பொறியாளர் முதல் நிலை இயந்திரவியல் 96 பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர் சார்பு உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளது. இயந்திரவியல் பிரிவில் நமது நீண்ட கால கோரிக்கைக்கு கிடைத்த முதல் வெற்றியாகும். பதவி மாற்றம் கிடைக்கப் பெற்ற அனைத்து பொறியாளர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இளநிலைப் பொறியாளர் முதல் நிலை இயந்திரவியல் பதவி உயர்வுக்கான நீதிமன்ற வழக்கு இரு தினங்கள் பட்டியலிடப்பட்டு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. விரைவில் வழக்கு விசாரணை முடிவுக்கு கொண்டு வர துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலை மின்னியல் பதவி உயர்வுகளில் 2022ம் ஆண்டில் மூன்று ஆண்டுகள் முடித்துள்ள நபர்களுக்கு மட்டும் வழங்கிட வாரியம் முடிவெடுத்துள்ளது.

மின் தொடரமைப்பு கழகத்தில் நிர்வாக கட்டமைப்பில் பல மாற்றங்களை கொண்டு வர நிர்வாகம் உத்தேசித்து அதை நிறைவேற்றும் நோக்கில் பயணித்து வருகிறது.

கிளைகளின் ஆண்டு பேரவை கூட்டங்கள் வரும் 28.01.2023 முதல் துவங்க உள்ளன. கிளைகளின் பேரவை கூட்டங்களில் உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களை தெரிவித்தும் வாரியத்தின், சங்கத்தின் தற்போதைய செயல்பாடுகளை அறிந்து கொண்டு சங்கத்தின் செயல்பாடுகளுக்கு வலு சேர்த்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி,

பொர்.V.S.சம்பத்குமார்
பொதுச் செயலாளர்

## திருமண வரவேற்பு அழைப்பிதழ்



மணமகன்

**திரு.M.தனசேகரன்,** M.Sc., M.Phil., B.Ed.,
**திருமதி.V.தமிழரசி,** M.Sc., B.Ed., Ph.D
ஆகியோரின் மகன் திருநிறைச்செல்வன்
**D.புவனேஷ்வரன்,** B.E., (Civil).,
என்கிற மணமகனுக்கும்

மணமகள்

**திரு.V.பாபுஜி,** M.Tech., AE., TNEB, Chennai
**திருமதி.B.விஷ்ணுகுமாரி,** B.A., D.T.Ed.,
ஆகியோரின் மகள் திருநிறைச்செல்வி
**B.சௌந்தர்யா,** B.Arch.,
என்கிற மணமகளுக்கும்

**சுபமுகூர்த்தம் :**27.01.2023 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்குமேல் 10.00 மணிக்குள்

**இடம் : CPR அருவுகம் மஹால்** திருவேடகம் கிராமம், மதுரை மாவட்டம்

**திருமண வரவேற்பு : 01.02.2023 புதன் கிழமை**
**மாலை 6.30-9.00 மணிக்குள்**
**இடம் : சாந்தி சேஷ மஹால்**
லட்சுமிபுரம், கொளத்தூர், சென்னை – 99.

**அழைத்து மகிழும் : பொர்.V.பாபுஜி ,** AE/Schemes, TNEB Chennai

**மணமக்கள் எல்லா வளமும் பெற்று வாழ பொறியாளர் சங்கம் வாழ்த்துகிறது**

மின் அலை வளர்ச்சி நிதி ரூ.1,000/– அளித்துள்ளார், நன்றி

## திருமண & வரவேற்பு அழைப்பிதழ்



மணமகன்

**திருமதி.கே.முத்து**
அவர்களின் மகன் திருநிறைச்செல்வன்
**க.மு.அரவிந்த்,** M.B.B.S., M.S., ENT.,
என்கிற மணமகனுக்கும்

மணமகள்

**திரு.கா.இரவிச்சந்திரன்,** AEE, TNEB
**திருமதி.வெ.லதா இரவிச்சந்திரன்**
ஆகியோரின் மகள் திருநிறைச்செல்வி
**இர.கவிஅரசி,** M.B.B.S., MD Gen Med.,
என்கிற மணமகளுக்கும்

**சுபமுகூர்த்தம் :**
19.02.2023 **ஞாயிற்றுக்கிழமை**
**காலை 7.30 மணிக்குமேல் 08.30 மணிக்குள்**

**இடம் : சகாய அன்னை மண்டபம்,**
**சரஸ்வதி வாசக சாலை,**
**தேவகோட்டை, சிவகங்கை மாவட்டம்**

**திருமண வரவேற்பு :**
**19.02.2023 ஞாயிற்றுக்கிழமை**
**பகல் 11.00 மணி முதல்**

**இடம் :** R.N.**பங்ஷன் பேலஸ்**
**டோல்கேட், ஆபீஸர்ஸ் லைன், வேலூர்**

**அழைத்து மகிழும் : பொர்.கா.இரவிச்சந்திரன்,** AEE, TNEB, Vellore

**மணமக்கள் எல்லா வளமும் பெற்று வாழ பொறியாளர் சங்கம் வாழ்த்துகிறது**

மின் அலை வளர்ச்சி நிதி ரூ.1,000/– அளித்துள்ளார், நன்றி

## Our Sangam's proposal in Wage revision Discussion on 24.01.2023

To
The Chairman
Work Load and Wage Revision Committee
TANGEDCO, Chennai – 2

Respected Sir,

Sub: Wage Revision 2019 Proposal given by Board – Opinion and further points of our Sangam – submission regarding.

Ref: Letter No. 52295 / A16 / A161 / 2019 – 15, Dated: 10.01.2023

Wage Revision for Employees of the Board is due from 01.12.2019. 2nd round of discussion with Unions was held on 09.01.23 having held the 1st round of discussions earlier on 15.09.2022. After the persistent insistence by the Unions during the last discussion Board has given the written proposal on Wage Revision vide reference cited.

We sincerely thank the management for the same and submit the reply containing apprehensions and suggestions of our Sangam on the proposal given by the management.

**1. Implementing Govt. Scale of Pay for the future Recruitees:**

Board has opined to implement Scale of pay of the Govt. of Tamilnadu to the employees of the Board to be recruited in future. This would not only create disparity but also a downgrade from the present condition.

Downgrading the scale of pay for the new recruitees would be totally absurd and spell disaster as discrimination in pay between two persons belonging to the same category will affect the Board works not only on day to day basis but also on a long run.

Moreover comparing Power men who work 24 x7 on par with their counterparts elsewhere in other Govt. departments, doesn't augment well as they work in a confined area on a specific timings. This is the reason why Pay Scales of Power are placed above their counterparts in other Govt. departments.

In simple terms there is no guarantee for a Power Employee to return back home while he steps out for office every day. This is no exaggeration and it is real fact. This factual condition should be deeply considered during implementation of this proposal.

If at all there is a need for bringing uniformity in the Scales let the categories which are receiving less pay than their counterparts in Govt. be paid equally if not highly. To cite a case we would like to point out that Technical Assistants in Board are being paid less than their counterparts in Govt. and our plea for setting it right is pending for decades.

While the Power Employees are not guaranteed of returning home due to the nature of work, this proposal to downgrade the Scale of Pay for the new recruitees creating disparity within categories is a big step backwards and demoralize them totally.

**Hence for the wellbeing of the Board, our Sangam totally objects this proposal.**

**2. Implementation of Outsourcing Policy:**

Tamilnadu Electricity Board is a well-established firm catering the need of the General Public and the Industries in the State with quality power at affordable rates for well over 6 decades.

The success of the firm is due to various factors from technical expertise, skilled and

dedicated employees at all levels, collective team work with never say die spirit and much more. An established power network is being built by this team.

All the said factors would be effective and applicable only when the employees at whatsoever level have the feeling of my organisation in his heart and mind. This feel will come only for those employed on permanent basis.

Above all safety to Personnel and Equipment can be ensured only when work is being carried out by the permanent employees. We have substantiated this to the Board on numerous occasions during the discussion held with us through various facts and figures.

The Govt. and the Public Sectors like TNEB are duty bound to give employment for its people particularly for those in the educated section. TNEB plays a major role in it and any decision to go for outsourcing will totally have its ill effects on the status of the people.

**Demerits of Outsourcing enumerated by us earlier is being reiterated below:**

Numerous posts covered under the Work Load settlement is being planned to be outsourced which will spell doom on the organisation. The Board is least bothered about the repercussions on long term and concentrates on short term only. It is against the Work Load Settlement between the Board and the Unions. We sternly and vehemently oppose this decision which is not only shocking but sinister in nature.

Substations and Distribution Sections are covered under the Work Load Settlement and sanctioning of Posts pertaining to these areas are governed by this Settlement. Hence Board is duty bound to discuss with Unions in this regard if at all any need arises for making a change, rather than taking decisions unilaterally.

Due to this action on outsourcing, Board has not only violated the settlement blatantly but also defeated this concept by breaking the relationship. Moreover, the Outsourcing of these sensitive areas covered under Work Load Settlement and select areas in Thermal and Hydro Stations, will lead to disaster on a long term and derail the existing network of Electrical System which are well established in TANGEDCO.

Hence the thought, concept and plans for outsourcing in sensitive areas and important posts whatsoever needs to be dropped and Board needs to honour the settlement made with unions on 22.02.2018, the one which is the dream of each and every employee of the Board presently so as to maintain industrial peace and harmony.

**Hence, if not for the safety of the Personnel but considering the safety of Board equipment and stability of power network this proposal needs to be reconsidered before implementation. Also without knowing the area to be outsourced and the posts to be outsourced it is hard to give a thinking for this proposal.**

**Hence our Sangam totally rejects this proposal for the wellbeing of the Board.**

**Note:**

Copy of the points presented by us enumerating the ill effects of Outsourcing during the discussion held with Board on 24.09.2020 is being herewith attached.

**3. Wage Revision Benefits:**

Hike of a meagre amount of 5% is totally unacceptable and well below the standards allowed to the Board Employees in the previous wage revisions throughout these 6 decades.

Power Employees have done an exemplary work during the COVID pandemic risking their

lives and prove their mettle yet again like their war footing work carried out during natural calamities in restoration of power year after year.

Time and again Govt. and Board had rewarded its Employees befittingly during Wage Revision for their committed work.

It is this due recognition which drives them day in and day out while carrying out their official duties. The same should be followed during this Wage Revision too.

It is our duty to point out that, Power Employees are boiling over denial of front line worker status to them during the COVID period. Many families have lost their breadwinners and put up in a very pathetic condition where their wards have not even attained the age of claiming compassionate appointment.

A reasonable increase in Wage revision would be a solace to the Power Employees recognizing their services at least now and reward through this wage revision.

Hence a **minimum hike of 20%** will be a reward to the employees who deserve this amount for having put up a brave service risking their lives during the COVID pandemic.

**Moreover we emphasize that the increased pay should be effected for everyone including all Employees from its due date of 01.12.2019 and all benefits should be paid right from the due date.**

**4. Extending of Wage Revision to Class – I & II Employees:**

It is perplexing to note in the final part of point #3 stating that hike in wages are applicable for “Employees who are covered under the Industrial Disputes Act alone” which indirectly means Class - I & II Employees are not entitled for this hike.

The same matter has been reiterated in other words in point #4 that revision of wages will not be extended to Employees who are not covered under Industrial Dispute Act and the Government's recommendation and Pay Commission alone will be extended to Class – I and II employees.

We feel very sorry to register that this matter wasn't revealed to us by the Wage Revision Committee on both occasions of the discussions held with us. Board is duty bound to inform of this decision to the Unions which forms a bridge between the Employees and the Management.

Class – I & II employees consists of all categories including Engineers. Unlike other departments where Engineers and top brass Officials restrict themselves within office. Whereas Board Engineers at all levels work in the field day in and day out 24 x 7 and other top brass Board Officials including the Directors are forced to come to the field during emergency.

Physical presence of Class – I & II Officers in field risking their lives during natural calamities has minimized the period of restoration work. Time and again these achievements have received praise from the Government and the General Public.

Alienating Class – I & II Officers from the benefits of Wage Revision will be disastrous and paralyze the Board at all levels in all corners. The management should not even think of this demarcation even in its dreams.

**So the benefits of Wage Revision should be extended to all including Class – I & II Officials on par with the Class – III & IV employees from 01.12.2019.**

**5. Abolition of Unutilized Posts:**

Huge number of posts are lying vacant in almost all categories in all posts including Shift, Maintenance and Office areas. The vacancies are compensated by sharing of load by the available

incumbents and also by employing retired persons and outsourcing for a short period.

It is pertinent to note that this additional burden can be shouldered only for a short period and not permanently. Board should realize this and stop going in for abolishment of posts lying vacant for quite some time and go in for a periodical recruitment.

**Anyway rather than rejecting this proposal outright we are ready for a discussion with the Board in this regard.**

Apart from the reply to the points put forth by Board in its proposal we are submitting the additional point in the Wage revision for kind consideration.

**Additional Points on Wage Revision:**

- ❖ Annual increment to be enhanced from the present rate of 3% to 5%.
- ❖ One increment as Service weightage per 9 years of service to be allowed throughout, vice 9 – 18 – 27 and 36 years of service.
- ❖ Double increment for Selection Grade on completion of 9 years of service to be continued and double increment for Special Grade to be brought up from 20 years to 15 years of service, so as to compensate the affected who are starved of promotions even after a period of one and half decades.
- ❖ HRA and CCA to be allowed on par with Central Govt. Pay Commission.
- ❖ Medical Allowance to be enhanced from present amount of Rs. 300/- to Rs. 600/- per month.
- ❖ All the existing allowances should be doubled.
- ❖ Time Bound promotions to be allowed ensuring a minimum of 3 promotions in the service career.
- ❖ On par with Remote Hydro Allowances for Hydro Stations, Special Allowances to be allowed for other areas of the Board for distribution, Substations etc. situated in the same geographical area as that of the Hydro Station.
- ❖ Special allowances to be allowed for Distribution Sections, Substations and other areas of the Board situated in hills on percentage basis as allowed to Hydro Generating Stations.
- ❖ Monthly Thermal Incentive Allowance paid to Thermal Power Stations to be delinked from Plant Generation and paid as Thermal Allowance irrespective of Plant running status.
- ❖ Hotline allowance should be allowed without restrictions in ceiling.
- ❖ TA Bill to be enhanced and allowed without restrictions in ceiling.
- ❖ Conveyance Allowance to be newly allowed for all field Engineers and Staff members.
- ❖ Special Allowance to be newly allowed for all field Engineers and Staff members working in Special fields like Lines, MRT, Special Maintenance, GRT, Cables and other important fields.
- ❖ City Compensatory Allowance – CCA should be extended for all Corporations.

All the additional points on Wage Revision, listed above are the reiteration of our demands submitted earlier on 15.09.22during the 1st round of discussion which needs to be considered positively.

**We have also reiterated the other pending genuine demands put forth by us during the 1st round of discussion held on 15.09.22.**

**Pending Demands to be fulfilled:**

**1. Sanctioning of Posts as per Settlement:**

Formation of new sections as per the present Work Load and Wage Revision Settlement is still pending for 61 sections which is to be carried out swiftly before the forthcoming settlement. Moreover this reorganizing exercise should be carried out annually without fail. Utmost care should be taken during this exercise and retrenchment of posts should be avoided considering the future growth of the electrical network.

Sanctioning of new posts for newly commissioned Substations and upgraded Substations is still pending whose count is above 140 Nos. affecting not only the operation and maintenance works but also the distribution of power network. This too has to be carried out immediately.

**2. Sanctioning of Technical Assistant Posts for each Distribution Section:**

In the earlier Work Load and Wage Revision Settlement, the Technical Assistant posts were allowed in each Urban Section of Chennai Electricity Distribution Circles /South, North, West, Coimbatore Electricity Distribution Circle/Metro, South and North, Madurai Electricity Distribution Circle and Madurai Metro Electricity Distribution Circle, Trichy Electricity Distribution Circle/Metro, Erode Electricity Distribution Circle and Salem Electricity Distribution Circle.

Among the areas which weren't covered in the earlier settlement, creation of Technical Assistant posts for remaining Urban Sections and all Rural Sections needs to be considered as agreed, by sanctioning of Technical Assistants post for all other Distribution Sections.

Presently the works carried out in Distribution Sections are mostly related to computer based works, notably GIS Mapping, ERP, Online application etc. Having a Diploma qualified technical person like a Technical Assistant to handle these works would aid the Board work in many ways to ease the procedure and also to satisfy the consumers.

Hence sanctioning of Technical Assistants posts to all Distribution Sections would be very much beneficial to the Board under the prevailing working conditions which we insist to be considered.

**3. Adopting of Government Scale for Technical Assistants:**

Adopting of Government Scale for Technical Assistants in the Board is pending for quite long. Implementing the same was agreed during 2014 Wage Revision talks but kept pending with an assurance that the Government Scale of Technical Assistants 9300 - 34800 / GP 4200 will be recommended to Wage Revision and Work Load committee which is yet to be implemented.

Sangam insists implementation of this accepted genuine demand at least in the forthcoming Settlement.

**4. Creation of Technical Assistant / Civil Post:**

Technical Assistant post is the entry level post for Diploma holders in the Board. While this post is available for Electrical and Mechanical Branches, it doesn't exist for Civil Branch. Hence the persons with Diploma / Civil qualification are utilized in other RWE categories. We have been representing continuously for creation of Technical Assistant / Civil posts.

During the talks held for RWE avenues of Hydro Circle in the year 2013 this matter was brought up and it was ascertained that nearly 100 plus qualified Civil diploma holders are working without proper post and promotional avenues in accordance with their acquired qualification.

The Hydro committee looked into this demand seriously with an eye of utilizing these Diploma Holders for Surveying, Estimating, Pole casting yard and other field related works pertaining

to Civil areas. The matter was decided to be put up in the Work Load and Wage Revision.

In continuation to the above, discussion was held with the Chief Engineer / Personnel on 23.02.2016 and it was agreed to create Technical Assistant / Civil post principally. The commitment was made by the Chief Engineer / Personnel on 23.02.2016 and minutes was communicated to our Sangam vide CE/Personnel Lr.No.7087/36/G43/G431/2016,Dt.04.02.2016.

The pending demand needs to be considered at least now by creation of Technical Assistant / Civil post.

**5. Awarding of Common Designation among AE / JE I Grade:**

Awarding of Common Designation for Assistant Engineer / Junior Engineer I Grade posts by naming them as Assistant Engineer (G) / Assistant Engineer (D) as per the orders of the labour tribunal and substantiated by the Hon'ble High Court of Chennai, is pending implementation despite nil financial implication.

The matter was agreed upon by the respected Chairman cum Managing Director during the discussion held with us on 07.10.2021 and still pending implementation.

**6. Awarding of Assistant Executive Engineer (Non - Independent) Posts:**

Based on our persistent representation, Assistant Executive Engineer (Non - Independent) re - designation has been awarded recently to Junior Engineer / Mechanical I Grade who had completed more than 15 years of service in the same post on par with the re - designation extended to their counter parts in Electrical discipline few years ago.

We sincerely thank the management for the same.

The same needs to be extended to the Junior Engineer / Electrical I Grade who had completed more than 14 years of service currently in the same post.

Moreover Board should extend an advance increment to these re – designated Engineers, as it would be very much beneficial to these persons who are really starved of promotions for almost 2 decades.

**7. Revival of Construction Wing:**

Distribution Sections are the heart of our Board as it's these offices which are in direct contact with the consumers. Apart from Operation and Maintenance of the Sections, lot of other works are being carried out like Improvement, DCW, and EOS etc. Moreover welfare schemes by State Govt. and Grant schemes by Central Govt. like RDS, UDAY needs to be carried out.

Such works needs to be executed by a separate wing after evolving of estimates by the Distribution wing. Presently all the works listed above are being carried out by O&M Sections, which is a burden to them in addition to their day to day activities.

Revival of construction wing will put an end to this ordeal and they can be utilized effectively for executing such additional works.

Hence the construction wing may be revived for the better functioning of the Section Offices to fulfill the needs of the consumers satisfactorily and thereby improve the image of the Board.

**8. Creation of FOC Call Centers:**

FOC call centers of round the clock operation are mandatory for all Metro and Urban areas for better service to the consumers. Creation of such call centers with proper and adequate staff may be allowed in the forthcoming settlement.

**9. Enhancement of Earned Leave Ceiling:**

Ceiling limit of Earned Leave should be raised from the present 240 days to 300 days, considering various aspects including work load.

**10. Special consideration on Earned Leave:**

Like any other Government Employee, Board Employees too aren't entitled for encashment of Earned Leave for the past couple of years during the COVID period. While Employees of other departments were allowed to avail earned leave, Employees of Board weren't allowed to avail so, having being listed in essential department. Hence this leave gets lapsed.

Accounting of this unclaimed leave needs to be maintained separately (for availing of leave only) in addition to the already allowed 240 days would be a reward to the sincerely working Power Employees in due recognition of their committed work.

It is pertinent to point out that frontline workers status too was denied to Power Employees despite being fully eligible. Considering this demand positively would at least serve as a compensation.

**11. Reactivation of MRT Laboratories:**

MRT division presently comprises of Protection, Special maintenance, Metering in HT & LTCT wings.

Earlier a decade ago MRT labs were involved in full swing for testing of Energy meters utilizing the test benches in MRT lab by employing Technical Assistants for this sensitive work. This testing work played a major role in Board's revenue minimizing its leakages. For reasons best known to the Board this procedure was stalled.

Presently the need for this testing procedure has risen again after the introspection of the top level management in this regard to arrest revenue leakage.

Board has issued instructions for testing of all released meters from O&M sections which involves receiving, testing and devolution of released meters apart from entering of data in software. These works are more sensitive in nature as it is revenue related as said earlier.

Hence MRT lab needs to be reactivated and additional Technical Assistant and other supporting staff including sub store needs to be sanctioned for carrying out such a sensitive work which fetches more income to the Board. This may be allowed during the forthcoming settlement please.

**12. Formation of Separate Maintenance Wing for RMU:**

Ring Main Unit - RMU were inducted in the Electrical network of Chennai in the year 2006 and during the year 2013 in other Metro Cities. The purpose of this unit is not only for reducing the down time of the power network but also keeping in mind the modernization and beautification of the metro cities. Introduction of 400 Nos. RMU in OMR road by Tamilnadu Road Development Corporation speaks volumes of its importance.

Totally around 13,000 Nos. of RMUs have been erected in TANGEDCO throughout these years. Among them 50% of the units belonging to 2006 lot and 75% of the units of 2013 lot are only in healthy condition. Most of the faulty RMUs are in repairable condition but couldn't be repaired for want of separate wing to look after these works.

Sanctioning of a separate wing to look after these RMUs would do good not only for the power network but also lift the image of the Board among public as it reduces breakdown to a greater extent. Sanction may be accorded for the same during the forthcoming settlement.

## GENERAL MATTERS OF IMPORTANCE

**1. Withdrawal of BP 2:**

Ill effects of BP 2, dated: 12.04.2022 which has totally shrunk the power and size of the Board has been highlighted by all Unions including our Sangam. Even the unions were forced to go in for an agitation for withdrawal of this draconian order.

Withdrawal of this draconian order is imminent not only to keep up the assurances given to the Unions but also to maintain industrial peace and harmony.

**2. Withdrawal of Orders on Cancellation of Internal Selection:**

To the utter shock of its employees particularly the lower and middle level staff, issuing of orders (Per.) FB TANGEDCO Proceedings No.5; dated 7th July 2022 withdrawing promotion by internal selection is highly cruel as it spells doom to the five decade old rights.

The order is contradicting the advocacy of the State Govt. which encourages its citizens to keep on studying not only to acquire knowledge but also to enlighten their lives thereby improving their socio economic status.

Hence the controversial order crushing the aspirant employees needs to be withdrawn bringing light upon the individuals and their families.

**3. Withdrawal of orders on Amendment to Service Regulation 94 and 98:**

Amendment to Service Regulation was issued vide orders (PER) FB TANGEDCO Proceedings No. 18; Dated: 02.06.2020. The said order is sinister in nature affecting, only select categories including our Diploma Engineers.

Promotions are totally based on vacancies and this order would hinder the actions of the Administration in filling up of vacancies. This would reflect much on the field where certain posts of importance are kept vacant for quite long, affecting Board works.

While our community are ready to give their all-out efforts for the wellbeing of the Board such orders totally affects their spirit and demoralizes them.

Hence withdrawal of this Amendment to Service Regulations 94 and 98 of Tamilnadu Electricity Board may be done immediately allowing the 6 decade old practice to continue in the Board forever.

**4. Tripartite Settlement:**

Based on G.O. 100, Board had initiated the process of Tripartite Settlement which has been kept on hold for quite long for want of clarifications. The draft on this subject presented by Administration to Unions were duly reverted back after due suggestions.

The process is to be expedited and Settlement may be entered at the earliest with due consideration of the points suggested by the Unions.

Yours Sincerely,

V.S.SAMPATHKUMAR

General Secretary

Secretariat Branch
N.P.K.R.R. Maaligai,
144, Anna Salai, Chennai - 2.

**Letter No. 52295 / A16 / A161 / 2019 - 12, Dated : 05.01.2023**

From
THIRU. G. CHINNA NAGUR, B.Sc., M.A., M.L., P.G.D.L.A.,
SECRETARY (FAC).

To
The General Secretary,

1. Tamil Nadu Electricity Workers Federation.
2. Tamil Electricity Board Accounts and Executive Staff Union.3. Tamil Nadu Electricity Board Workers Progressive Union (LPF).
4. Central Organisation of Tamil Nadu Electricity Employees.
5. Minsara Pirivu Anna Thozhir Sangam.
6. Tamil Nadu Minvariya Janatha Thozhilalar Sangam.
7. Tamil Nadu National Electricity Workers Federation. (Xavier group)
8. Tamil Nadu National Electricity Workers Federation. (Swarnaraj group)
9. Tamil Nadu Electricity Board Engineers Sangam.
10. Tamil Nadu Electricity Employees Congress.
11. Tamil Nadu Board Thozhilalar Poriyalar Aykkiya Sangam.
12. Tamil Nadu Electricity Board Engineer's Association.
13. Tamil Nadu Electricity Board Finance & Accounts Officers Association.
14. Bharathiya Electricity Employees Federation.
15. Tamil Nadu Electricity Board Card Billing Staff Union.
16. Tamil Nadu Electricity Board Dr. Ambedkar Employees Union.
17. Tamil Nadu Electricity Board Engineers Union.
18. Tamil Nadu Electricity Board Employees Federation.
19. Tamil Nadu Electricity Board Paatali Thozhir Sangam.

Sir,

Sub : TANGEDCO - Revision of Wages and Revision of Work Allocation and Staff Pattern effective from 01.12.2019 - Discussion with Unions / Associations - Date and Time - Intimated.

Ref : 1. (Per) CMD TANGEDCO Proceedings No.224 (SB) Dated : 07.12.2019
2. Memo. (Per) No. 52295 / A16 / A161 / 2019-11, dated : 05.01.2023

---

I am to invite your attention to the references cited and to inform that it has been proposed to conduct a Wage Revision meeting with the Trade Unions / Associations on 09.01.2023 (Monday) at 11.00 A.M. in the Auditorium Hall of TANTRANSCO building at 6th Floor.

2. I am therefore to request you to make it convenient to attend the said meeting not more than 5 (Five) of the representatives of your Unions / Associations.

Yours faithfully,
SECTION OFFICER
for SECRETARY (FAC)

## TANGEDCO

Secretariat Branch
N.P.K.R.R. Maaligai,
144, Anna Salai, Chennai - 2.

**Memo. (Per) No. 52295 / A16 / A161 / 2019-11 Dated : 05.01.2023**

Sub : TANGEDCO - Revision of Wages and Revision of Work Allocation and Staff pattern effective from 01.12.2019 - Constitution of Wage Revision Committee - Inclusion of Government representatives in the Wage Revision Committee - Amendment - Orders - Issued

Ref : 1. (Per.) CMD TANGEDCO Proceedings No.224 (SB) dated 07.12.2019.
2. From the Government Letter No.10440/B2/2022-1, dated 04.01.2023.

—

In the reference first cited, the Wage Revision Committee has been constituted to negotiate with the Unions / Associations for revision of Pay, Work allocation and Staff pattern with effect from 1.12.2019.

2. In the reference second cited, the Government has nominated the following officers representing Finance Department / Energy Department for inclusion in the Wage Revision Committee of TANGEDCO:-

1. Thiru. Prashant M. Wadnere, I.A.S.
Additional Secretary to Government
Finance Department, Secretariat, Chennai - 9.

2. Thiru. S. Muralidharan,
Additional Secretary to Government,
Energy Department, Secretariat, Chennai - 9.

The same has been considered. Accordingly, it is ordered that the officers representing Finance Department / Energy Department are included in the Wage Revision Committee as Members.

(BY ORDER OF THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR)

G. CHINNA NAGUR / SECRETARY(FAC)

## TANGEDCO

Secretariat Branch
N.P.K.R.R. Maaligai,
144, Anna Salai, Chennai - 2.

**Letter No. 52295 / A16 / A161 / 2019 - 15, Dated : 10.01.2023**

From
K.SUNDARAVADHANAM, B.Sc., ACA, ACS
Director (Finance) / TANGEDCO

To
The General Secretary,
1. Tamil Nadu Electricity Workes Federation.
2. Tamil Electricity Board Accounts and Executive Staff Union.
3. Tamil Nadu Electricity Board Workers Progressive Union (LPF).
4. Central Organisation of Tamil Nadu Electricity Employees.

5. Minsara Pirivu Anna Thozhir Sangam.
6. Tamil Nadu Minvariya Janatha Thozhilalar Sangam.
7. Tamil Nadu National Electricity Workers Federation. (Xavier group)
8. Tamil Nadu National Electricity Workers Federation. (Swarnaraj group)
9. Tamil Nadu Electricity Board Engineers Sangam.
10. Tamil Nadu Electricity Employees Congress.
11. Tamil Nadu Board Thozhilalar Poriyalar Aykkiya Sangam.
12. Tamil Nadu Electricity Board Engineer's Association.
13. Tamil Nadu Electricity Board Finance & Accounts Officers Association.
14. Bharathiya Electricity Employees Federation.
15. Tamil Nadu Electricity Board Card Billing Staff Union.
16. Tamil Nadu Electricity Board Dr. Ambedkar Employees Union.
17. Tamil Nadu Electricity Board Engineers Union.
18. Tamil Nadu Electricity Board Employees Federation.
19. Tamil Nadu Electricity Board Paatali Thozhir Sangam.

Sir/Madam,

Sub : TANGEDCO - Revision of Wages and Revision of Work Allocation and Staff Pattern with effective from 01.12.2019 - Discussion with Unions / Associations - Furnishing of Proposals of TANGEDCO - Opinion - Called For.

Ref : 1 (Per) CMD TANGEDCO Proceedings No. 224 (SB) dated. 07.12.2019.

2. SB Letter No. 52295/A16/A16/2019-5, dated 05.09.2022.

3. From the Commissioner of Labour, Letter No. P2/39840/22, dated 27.12.2022

4. SB Letter No. 52295/A16/A161/2019-12, dated 05.01.2023

I am to Invite your kind attention to the discussion had with the Trade Unions / Associations on 15.09.2022, 16.09.2022 and 21.09.2022 as called upon in the references second cited. The Trade Unions/ Associations have raised their various demands in respect of wage Revision and Work Load Settlement w.e.f. 01.12.2019 in TANGEDCO.

2. In the meantime, 11 Trade Unions have given a notice to the TANGEDCO that they have proposed to go on strike on 10.01.2023 by citing various demands in their notice including Wage revision as one of their demands.

3. In the reference third cited above, the Commissioner of Labour / Chennai, has instructed to attend the conciliation meeting on 03.01.2023 and on 06.01.2023 with the Trade Unions who have given the strike notice, consequent to the proposed one day strike on 10.01.2023.

4. In the reference fourth cited, all the Trade Unions / Associations have been invited for discussion on 09.01.2023 at 11.00 A.M. with regard to Wage Revision and Work Load Settlement w.e.f.01.12.2019. Accordingly, all the Trade Unions have participated in the discussion on 09.01.2023. In the said discussion, all the Trade Unions / Associations have been requested to give the proposals of TANGEDCO/TANTRANSCO in respect of Wage Revision and work Load.

5. I am, therefore, to request you to give your views on the above said proposals so as to enable the TANGEDCO to discuss further in this matter and finalize the Wage Revision and Work Load Settlement.

Yours Faithfully,
K. Sundaravadhanam
Director (Finance) / TANGEDCO

(ABSTRACT)

**ESTABLISHMENT TANGEDCO-REDESIGNATION OF CERTAIN JUNIOR ENGINEER MECHANICAL I GRADE WHO HAVE COMPLETED 15 YEARS AS JUNIOR ENGINEER MECHANICAL I GRADE AS ASSISTANT EXECUTIVE ENGINEER/MECHANICAL (NON-INDEPENDENT) -ORDERS ISSUED.**

(ADMINISTRATIVE BRANCH)

(Per) CMD TANGEDCO Proceedings No.01 Dated 11.01.2023,

**Read:** Note approved by CMD on 07.01.2023

**Proceedings:** The Junior Engineer/Mechanical I Grade who have joined during the year 1999 to 2006 have represented that they are working as Junior Engineer/Mechanical I Grade for the past 15 years and requested to re-designate them as Assistant Executive Engineer/Mechanical (N.I.)

Their representations have been examined and after careful consideration, it is hereby ordered that the list of 96 persons (Ninety Six) holding the post of Junior Engineer Mechanical I Grade in TANGEDCO as per Annexure be Re-designated as Assistant Executive Engineer/Mechanical (N.I.) without Monetary (or) any other benefit as a one time measure whatsoever with effect from the date of issue of this B.P. subject to the following conditions.

i) No new sub-divisions shall be created to accommodate them, and they have to perform the work of Junior Engineer Mechanical I Grade and work under AEE/Mechanical concerned till they get promotion as Assistant Executive Engineer/ Mechanical in the regular vacancies, according to their inter-se-seniority and as per the orders in force.

ii) The benefit of Re-designation shall be personal to them. The above Re-designated posts will be converted automatically as Junior Engineer/Mechanical I Grade at the time of the incumbents holding the Re-designated post get regular promotion in their turn or at the time when they get retirement or get relieved from the post, whichever is earlier.

iii) On transfer from one post of Junior Engineer Mechanical I Grade to another post as well, the Re-designation as Assistant Executive Engineer/Mechanical (N.I.) shall continue. The Re-designation ordered shall not apply to those who are on Extra Ordinary Leave, unauthorized absence, suspension, voluntarily retired/resigned, under going punishment against whom major disciplinary proceedings have been contemplated and criminal charges are pending.

iv) The Re-designated Assistant Executive Engineer/ Mechanical (N.I.) shall not seek request/demand any monetary benefit (or) any other whatsoever by virtue of this order.

v) The Re-designation so ordered shall not confer any power/privilege attached to the post of regular Assistant Executive Engineer/Mechanical and they shall continue to exercise the powers of Junior Engineer Mechanical I Grade only wherever they are posted for all purpose and work under Assistant Executive Engineer/Mechanical concernred.

vi) The Re-designation is ordered as a special case and it shall not be taken as a precedent in future.

vii) Undertaking shall be obtained from the individuals that they will not claim any benefit other than the Re-designation as AEE/Mechanical (N.I.).

viii) Further promotion will be given based on the existing Assistant Engineer/Junior Engineer Mechanical I Grade ratio adopted for regular Assistant Executive Engineer/Mechanical promotion

Receipt of the Board's proceedings shall be acknowledged.

Encl:- 1) List of J.E/Mechanical I Grade.
2) Performa Undertaking.

(BY ORDER OF THE CMD/TANGEDCO0)

K. MOZHIARASI
CHIEF ENGINEER/PERSONNEL

| Sl.No | Name | DOB | Year of Joining as JE/Mech -I Gr | Present Station |
|---|---|---|---|---|
| 1. | PANEERSELVAM.V | 19.05.1967 | 1999 | NCTPS-I |
| 96. | UDHAYAKUMAR.P | 22.01.1975 | 2006 | MTPS-I |

## TANGEDCO

Administrative Branch
N.P.K.R.R. Maaligai,
144, Anna Salai, Chennai - 2.

**Memo.No.005493 /G. 13 /G. 131 / 2023. dated 13.0 1. 2023.**

Sub : Establishment - Class II Service - Filling up the post of Junior Engineer (Electrical) I Grade - Promotion and Allotment - Orders - Issued.

Ref : This office Memo.No. 013624/G.4/G.41/2022-69, dated 11.01.2023.

In the Memo. read above, the panel for the promotion to the post of Junior Englneer (Electrical) I Grade consisting of 658 candidates has been approved for the year 2022-2023.

2. Now, Under Regulation 106 of Tamil Nadu Electricity Board Service Regulations, read with the Tamil Nadu Electricity (Re-organisation and reforms) Transfer Scheme 2010, the candidates (580 Nos.) mentioned in the Annexure are promoted to the post of Junior Engineer (Electrical) I Grade on temporary basis and allotted to the circles noted against their names.

3.The Superintending Engineers concerned are requested to issue necessary appointment orders to the individuals, on their promotion as Junior Engineer (Electrical) I Grade and also requested to incorporate the following clause in the appointment orders to the promotees :-

i) The above order is subject to outcome of the verdict in the W,P"(MD) No.26053 of 2019, W.P.(MD) No.26056 of 2019, W.P.(MD) No,26676 of 2079, W.P.(MD) No,26678 of 2019, W.P"(MD) No.B39B of 2020, W.P.(MD) No'8877 of 2020, W.P. No.7658 of 2020, W.P"No.20237 of 2420, W"P.No.10470 of 2021, W.P.No.2409B of 2022, W.P.No.24096 of 2022, W.P,No,24091 of 2022, W.P. No.24090 of 2022, W.P. (MD) No.12095/2022, W.P. (MD) No.7710512020, W.P.(MD) No.7484 of 2020, W,P. (MD) No.2659712019, W.P"(MD) No. (Contempt Petition) 1315 of 20t9, W.F. No.230BB of 2022, W.A.No 141of 2022, W.P.(MD) No, 15396 of 2020 and other related Writ Petitions filed if any pending in the Hon'ble High Courts.

ii) The promotees concerned should join duty at the place posted within 2 weeks from the date of issue of this order and no modification of postings will be entertained.

iii) If he/she fails to assume charges within 2 weeks of relief from the present station, promotion orders will be cancelled.

4. The Superintending Engineers concerned are directed to relieve the promotees within 15 days from the date of receipt of order, by making local arrangements without waiting for substitute and

instruct them to join at the new post immediately, failing which the Officers concerned will be held responsible.

5. It is also informed that their pay may be fixed under Service Regulation 33 (b) or as per their option exercised subject to admissibility as per existing rules.

6. The Superintending Engineers concerned are also directed to ensure that no disciplinary proceeding is pending/charges framed / punishment awarded against the individuals before serving the promotion order.

K.MOZHIARASI
CHIEF ENGINEER/PERSONNEL

| Sl.No | Name | DOB | Present Circle | Allotted Circle |
|---|---|---|---|---|
| 1. | RAMALINGAM.S | 24.04.1966 | TTPS | TUTICORIN EDC |
| 580. | MANIVANNAN.K | 09.05.1986 | MADURAI EDC | SIVAGANGA EDC |

## TANGEDCO

Secretariat Branch
N.P.K.R.R. Maaligai,
144, Anna Salai, Chennai - 2.

**Letter No.52295/A16/A161/2019-18, Dated : 20.01.2023.**

From
Thiru.A.MANIKKANNAN, M.A., B.L., M.B.A,
SECRETARY, TANGEDCO.

To
The General Secretary,

1. Tamil Nadu Electricity Workers Federation
2. Tamil Nadu Electricity Board Accounts and Executive Staff Union
3. Tamil Nadu Electricity Board Workers Progressive Union (LPF)
4. Central Organisation of Tamil Nadu Electricity Employees
5. Minsara Pirivu Anna Thozhir Sangam
6. Tamil Nadu Minvariya Janatha Thozhilalar Sangam
7. Tamil Nadu National Electricity Workers Federation. (Xavier group)
8. Tamil Nadu National Electricity Workers Federation. (Swarnaraj group)
9. Tamil Nadu Electricity Board Engineers Sangam
10. Tamil Nadu Electricity Employees Congress
11. Tamil Nadu Electricity Board Thozhilalar Poriyalar Aykkiya Sangam.
12. Tamil Nadu Electricity Board Engineers' Association
13. Tamil Nadu Electricity Board Finance & Accounts Officers Association
14. Bharathiya Electricity Employees Federation
15. Tamil Nadu Electricity Board Card Billing Staff Union
16. Tamil Nadu Electricity Board Dr. Ambedkar Employees Union
17. Tamil Nadu Electricity Board Engineers Union
18. Tamil Nadu Electricity Board Employees Federation
19. Tamil Nadu Electricity Board Paatali Thozhir Sangam

Sir/Madam,

Sub: MEETING - Revision of Wages and Revision of Work Allocation and Staff pattern with effective from 01.12.2019 - Discussion with Unions/Association - Regarding.

Ref : 1. (Per) CMD TANGEDCO Proceedings No.224 (SB) dated: 07.12.2019.
2. Secretariat Branch Letter No.52295/A16/A161/ 2019-5, dated: 05.09.2022.
3. Secretariat Branch Letter No.52295/Al6/A161/ 2019-12, dated 05.01.2023
4. Secretariat Branch Letter No.52295/A16/A161/ 2019-15, dated 10.01.2023

I am to invite your attention to the reference fourth cited, wherein a proposal of the Management in respect of Wage Revision has been sent to you with a request to give your views.

2. I am to inform that the Wage Revision Committee has proposed to convene a meeting with your Union/Association in connection with the Wage Revision 2019 to be held at Meeting Hall, 5th Floor, TANTRANSCO Building on 24.01.2023 and 25.01.2023 as mentioned in the Annexure of this letter.

3. I am also to request you to make it convenient to attend the meeting with not more than 5 (five) representatives of your union/Association.

Yours faithfully,
Section officer
for Secretary / TANGEDCO


## திருமண அழைப்பிதழ்

மணமகன்
**திரு.D.சிவகுமார்,**
**திருமதி.S.சாமுண்டீஸ்வரி,**
ஆகியோரின் மகன் திருநிறைச்செல்வன்
**S.சதீஷ்,** B.E., (EEE).,
என்கிற மணமகனுக்கும்



மணமகள்
**திரு.A.பாஸ்கரன்,** B.E., AE, TNEB
**திருமதி.B.புஷ்பராணி,**
ஆகியோரின் மகள் திருநிறைச்செல்வி
**B.ஹேமப்பிரியா,** B.E., (ECE)
என்கிற மணமகளுக்கும்

**சுபமுகூர்த்தம் :**03.02.2023 **வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்குமேல் 9.30 மணிக்குள்**
**திருமண வரவேற்பு :**02.02.2023 **வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்குமேல்**



**இடம் : சாந்தி சேஷ மஹால்,** லட்சுமிபுரம், கொளத்தூர், சென்னை – 99.
**அழைத்து மகிழும் :**
**பொர்.A.பாஸ்கரன்,** AE/Gowrivakkam / South II/ Chennai / 9499050292



**மணமக்கள் எல்லா வளமும் பெற்று வாழ பொறியாளர் சங்கம் வாழ்த்துகிறது**

மின் அலை வளர்ச்சி நிதி ரூ.1,000/– அளித்துள்ளார், நன்றி


Faith is knowledge within the heart,
beyond the reach of proof.
- Kahlil Gibran

**1. குற்றம் சாட்டப்பட்ட பணியாளர் மீது விசாரணை நடைபெறும் போது அவர் கோப்பில் உள்ள ஆவணங்களை பார்வையிட வேண்டும் என்று கேட்டால் விசாரணை அலுவலர் அவர் பார்வையிட அனுமதி வழங்கலாமா?**

ஆவணங்களை பார்வையிட அனுமதி வழங்கலாம்.

ஆதாரம் : TNEB D&A REGULATIONS (Corrected upto JUNE 2015) - PAGE NO: 52 - PARA - (IV) (d)

**2. குற்றம் சாட்டப்பட்ட பணியாளர் மீது விசாரணை நடைபெறும் போது அவர் கோப்பில் உள்ள ஆவணங்களை ஒளிநகல்** (Xerox) **எடுக்க வேண்டும் தாருங்கள் என்று கேட்டால் விசாரணை அலுவலர் அவருக்கு ஒளிநகல்** (Xerox) **எடுக்க ஆவணங்களை வழங்கலாமா?**

ஒழுங்கு நடவடிக்கை கோப்பில் உள்ள ஆவணங்களை ஒளிநகல் (Xerox) எடுக்க கோரினால் ஆவணங்களை வழங்கக்கூடாது. அவர் விசாரணை நடவடிக்கையை குறிப்பெடுத்துக்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ஆதாரம் : TNEB D&A REGULATION (Corrected upto JUNE 2015) PAGE NO: 52 - PARA - (IV) (d)

**3. குற்றம் சாட்டப்பட்ட பணியாளர் மீதான விசாரணை நாளன்று உதாரணமாக 5 வாரியத்தரப்பு சாட்சிகளில் (5பேருமே வாரியப் பணியாளர்கள்) 3பேர் வந்துள்ளனர் 2பேர் வரவில்லை. இந்த சூழ்நிலையில் 5பேரும் வந்தால்தான் விசாரணையினை நடத்த வேண்டும் அல்லது விசாரணைக்கு வந்து 3பேரை கொண்டு விசாரணை அலுவலர் விசாரணையினை நடத்திடலாமா?**

விசாரணை நாளன்று 5வாரியத்தரப்பு சாட்சிகளில் (5பேருமே வாரியப் பணியாளர்கள்) 3பேர் வந்துள்ள நிலையில் 2பேர் வரவில்லை என்றால் வருகைதந்த 3பேரை வைத்து விசாரணையினை தொடர்ந்து நடத்தலாம். விசாரணைக்கு வராத 2பேரையும் குற்றம் சாட்டப்பட்ட பணியாளரையும் மற்றொரு விசாரணை நாள் அறிவித்து வரவழைத்து விசாரணையினை நடத்தி முடிக்கவேண்டும். விசாரணை அலுவலர் சாட்சிகளை விசாரணையில் கலந்துகொள்ள வற்புறுத்தக்கூடாது.

குறிப்பு : உதாரணமாக வாரியத்தரப்பு சாட்சிகள் 5பேரில் 3பேர் வாரியப் பணியாளர்கள் 2பேர் வாரியம் சாராத நபர்களாக (Private Witness) இருக்கும் பட்சத்தில் அவர்கள் விசாரணையில் கலந்துகொள்ளவில்லை என்றால் அவர்களுக்கு விசாரணை நாள் குறித்து 3வாய்ப்புகள் வழங்கவேண்டும். 3வாய்ப்புகள் வழங்கியும் (Private Witness) கலந்துகொள்ளாத பட்சத்தில் அவர்கள் இல்லாமலேயே விசாரணையினை நடத்தி முடித்துவிடலாம்.

ஆதாரம் : TNEB D&A REGULATION (Corrected upto JUNE 2015) CHAPTER -V- PAGE NO: 63 - PARA-4

**4. குற்றம் சாட்டப்பட்ட பணியாளர் மீதான விசாரணை நாளன்று உதாரணமாக 5 வாரியத்தரப்பு சாட்சிகளில் (5பேருமே வாரியப் பணியாளர்கள்) 3பேர் வந்துள்ளனர் 2பேர் வரவில்லை. விசாரணைக்கு வந்த 3பேரை கொண்டு விசாரணை அலுவலர் விசாரணையினை நடத்திவிட்டார் விசாரணையும் அன்றைய தினமே விசாரணை முழுவதுமாக முடிவு பெற்று விட்டது. குற்றம் சாட்டப்பட்ட பணியாளரும் விசாரணையினை அன்றைய தினமே முடித்துக்கொள்ள சம்மதம் தெரிவிக்கிறார். விசாரணைக்கு வராத 2பேரிடம்ட மற்றொரு நாள் விசாரணை நடத்திட வேண்டுமா?**

விசாரணை நாளன்று 5வாரியத்தரப்பு சாட்சிகளில் (5பேருமே வாரியப் பணியாளர்கள்) 3பே வந்துள்ள நிலையல் 2பேர் வரவில்லை என்றால் வருகைதந்த 3பேரை வைத்து விசாரணையினை விசாரணை

அலுவலர் நடத்திய நிலையில் விசாரணையும் அன்றைய தினமே விசாரணை முழுவதும் முடிவு பெற்றுவிட்டாலும் விசாரணைக்கு வராத 2பேரையும் குற்றம் சாட்டப்பட்ட பணியாளரையும் மற்றொரு விசாரணை நாள் அறிவித்து விசாரணையினை நடத்திமுடிக்க வேண்டும்.

குறிப்பு : உதாரணமாக வாரியத்தரப்பு சாட்சிகள் 5பேரில் 5பேரும் வாரியப்பணியாளராக இருக்கும் பட்சத்தில், 2பேர் விசாரணை நாளன்று விசாரணையில் கலந்துகொள்ளவில்லை என்றால் அவர்களுக்கு மற்றொரு விசாரணை நாள் குறித்து விவரங்கள் தெரிவித்து அவர்களை குற்றம் சாட்டப்பட்ட பணியாளர் முன்னிலையில் விசாரித்து விசாரணையினை நடத்தி முடிக்கவேண்டும்.

ஆதாரம்: TNEB D&A REGULATIONS (Corrected upto JUNE 2015) - CHAPTER-V-PAGE NO: 63-PARA-4

**5. ஒரு பணியாளர் மீதான ஒழுங்கு நடவடிக்கையினை விசாரணை செய்ய நியமனம் செய்யப்பட்ட விசாரணை அலுவலர் விசாரணையினை முடிக்கும் போது எந்தெந்த கேள்விகளைக் கேட்டு விசாரணையினை முடிக்க வேண்டும்?**

விசாரணையினை முடிக்கும்போது குற்றம் சாட்டப்பட்ட பணியாளரிடம் கீழ்கண்ட கேள்விகளை கேட்டுமுடிக்க வேண்டும்.

1) விசாரணையை இத்துடன் முடித்துக்கொள்ளலாமா?

2) மேலும் கூடுதல் விவரங்கள் ஏதேனும் தெரிவிக்க விரும்புகிறீர்களா?

3) விசாரணையின் போது தாங்கள் விளக்கமளிக்க போதிய கால அவகாசம் வழங்கப்பட்டதா?

4) விசாரணை தங்களுக்கு திருப்திகரமாக இருந்ததா?

ஆதாரம்: TNEB D&A REGULATIONS (Corrected upto JUNE 2015) - CHAPTER-V-PAGE NO: 62-PARA-6

**6. ஒரு பணியாளர் மீதான ஒழுங்கு நடவடிக்கையின் மீதான விசாரணை முடித்த பின்பு குற்றம் சாட்டப்பட்ட பணியாளர் தனது எழுத்து பூர்வமான விளக்கத்தினை (DEFENCE STATEMENT) அளிக்க அனுமதி கோரினால் விசாரணை அலுவலர் அனுமதி அளிக்கலாமா?**

DEFENCE STATEMENT அளிக்க அனுமதி அளிக்கலாம்.

ஆதாரம்:TNEB D&A REGULATIONS (Corrected upto JUNE 2015) - CHAPTER-V-PAGE NO: 68-PARA-11

**7. ஒரு பணியாளர் மீதான ஒழுங்கு நடவடிக்கையின் மீதான விசாரணை முடித்த பின்பு குற்றம் சாட்டப்பட்ட பணியாளர் தனது எழுத்துப் பூர்வமான விளக்கத்தினை அளிக்க ஏதுவாக விசாரணை நடைபெற்ற தினங்களில் பதிவு செய்யப்பட்ட விசாரணை நடவடிக்கை (INQUIRY PROCEEDINGS) பதிவுகளின் நகல்களை கோரினால் அவருக்கு அனுமதி விசாரணை அலுவலர் வழங்கலாமா?**

விசாரணை நடைபெற்ற தினங்களில் பதிவு செய்யப்பட்ட விசாரணை நடவடிக்கை (INQUIRY PROCEEDINGS) பதிவுகளை குற்றம் சாட்டப்பட்ட பணியாளர் எழுதிக்கொள்ள அனுமதி வழங்கலாம். ஒளிநகல் (Xerox Copy) வழங்கக்கூடாது.

ஆதாரம் : 1) தமிழ்நாடு மின்சார வாரிய எழுத்தர்துறைப் பணியாளர்களுக்கான நிலையாணைகள்–21 (VII) (ஈ) பக்கம் எண்.23

2) தமிழ்நாடு மின்சார வாரிய எழுத்துத்துறையல்லாத பணியாளர்களுக்கான நிலையாணைகள் – 32 (VII) (ஈ) பக்கம் எண் 31.

**8. உதாரணமாக ஒரு கோட்ட செயற்பொறியாளர் (DISCIPLINARY AUTHORITY) ஒரு**

**பணியாளர் மீதான ஒழுங்கு நடவடிக்கையின் மீது விசாரணை அலுவலர் நியமனம் செய்யும்போது அந்த அலுவலரது பெயரை குறிப்பிட்டு நியமனம் செய்யலாமா?**

உதாரணமாக ஒரு கோட்ட செயற்பொறியாளர் (DISCIPLINARY AUTHORITY) ஒரு பணியாளர் மீதான ஒழுங்கு நடவடிக்கையின் மீது விசாரணை அலுவலர் நியமனம் செய்யும்போது அந்த அலுவலரது பெயரை குறிப்பிட்டு நியமானம் செய்யக்கூடாது. விசாரனை அலுவலர் பதவியை குறிப்பிட்டு நியமனம் செய்ய வேண்டும்.

ஆதாரம் : TNEB D&A REGULATIONS -Chapter -IV - Page No : 59 - Para - 1

**7) ஒரு பணியாளர் மீதான ஒழுங்கு நடவடிக்கையினை விசாரனை செய்ய நியமனம் விசாரணை செய்ய நியமனம் செய்யப்பட்ட விசாரணை அலுவலர் முதல் நாள் விசாரணையினை முடித்துவிட்டார். மீண்டும் ஒரு நாள் விசாரணை அலுவலர் மாறுதலில் பணிவிடுவிப்பு செய்யப்பட்டு விட்டார். அவர் விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையினை எவ்வாறு தொடர வேண்டும்.?**

ஒரு பணியாளர் மீதான ஒழுங்கு நடவடிக்கையினை விசாரணை செய்ய நியமனம் செய்யப்பட்ட விசாரணை அலுவலர் ஒரு பகுதி விசாரணையினை முடித்த நிலையில், மாறுதலில் பணிவிடுவிப்பு பெற்று சென்றால், அவர் வகித்து வந்த பதவியில் பணியேற்பு செய்யும் அலுவலர் அந்த ஒழுங்கு நடவடிக்கையை அடுத்த கட்டமாக தொடர்ந்து விசாரணை செய்வார்.

ஆதாரம் : TNEB D&A REGULATIONS -Chapter -IV - Page No : 59 - Para - 1

**8) ஒரு இரண்டாம் நிலைப்பணி அலுவலர் உதாரணமாக உதவி மின் பொறியாளர் என்று வைத்துக்கொள்வோம். அவர் மீது TNEB D&A REGULATIONS 8(b)-இன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை மீதான விசாரணையின் போது அவர் தனக்கு உதவியாக தொழிற்சங்க பிரதிநிதி ஒருவரை வைத்துக்கொள்ள அனுமதி கோரினால் அவருக்கு விசாரனை அலுவலர் அனுமதி வழங்கலாமா?**

ஒரு இரண்டாம் நிலைப்பணி அலுவலர் உதாரணமாக உதவிமின் பொறியாளர் என்று வைத்துக்கொள்வோம். அவர் மீது TNEB D&A REGULATIONS 8(b)-இன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை மீதான விசாரணையின் போது அவர் தனக்கு உதவியாக தொழிற்சங்க பிரதிநிதி ஒருவரை வைத்துக்கொள்ள அனுமதி அளிக்க கூடாது. ஓய்வு பெற்ற வாரியப் பணியாளர் (RETIRED BOARD EMPLOYEE) ஒருவரை விசாரணையில் தனக்கு உதவியாக வைத்துக்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

ஆதாரம் : TNEB D&A REGULATIONS -PARA -8(b) Page No : 12,13,14

**9. வாரியப் பணியாளர் ஒருவர் மீதான ஒழுங்கு நடவடிக்கையின் மீதான விசாரணையில் குற்றச்சாட்டு குறிப்பாணையில் வாரியத் தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்ட வாரியப் பணியாளர்கள் விசாரணையில் கலந்து கொள்ள விசாரணை நாளன்று தற்செயல் விடுப்பு** (Casual Leave) **எடுத்து விட்டு வந்து கலந்து கொள்ள வேண்டுமா?**

வாரியப் பணியாளர் ஒருவர் மீதான ஒழுங்கு நடவடிக்கையின் மீதான விசாரணையில் குற்றச்சாட்டு குறிப்பாணையில் வாரியத் தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்ட வாரியப் பணியாளர்கள் விசாரணையில் கலந்து கொள்ள விசாரணை நாளன்று தற்செயல் விடுப்பு (Casual Leave) எடுத்து விட்டு வந்து கலந்து கொள்ளத் தேவையில்லை. அன்றைய தினம் அவர்களுக்கு வருகைப் பதிவேட்டில் முகாம் (CAMP) என்று குறிப்பிட வேண்டும். மேலும் அவர்கள் விசாரணை அலுவலரிடம் விசாரணையில் கலந்து கொண்டமைக்கான வருகைச்சான்று பெற்று தங்களது பிரிவு அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**10. வாரியப் பணியாளர் ஒருவர் மீதான ஒழுங்கு நடவடிக்கையின் மீதான விசாரணையில் குற்றச்சாட்டு குறிப்பாணையில் வாரியத் தரப்பு சாட்சிகளாக சேர்க்கப்பட்ட வாரியப் பணியாளர்கள் விசாரணையில் கலந்து கொண்ட இடம் பணியாளர்கள் விசாரணையில் கலந்து கொண்ட இடம் உதாரணமாக 8கிமீக்கும் மேல் இருக்குமானால் அவர் பண்ணலாமா?**

வாரியத் தரப்பு சாட்சிகளாக சேர்க்கப்பட்ட வாரியப் பணியாளர்கள் விசாரனையில் கலந்து கொண்ட இடம் உதாரணமாக 8 கி.மீ.க்கும் மேல் இருந்தாலும் அவர் செய்ய முடியாது

ஆதாரம் : TNEB D&A REGULATIONS -CHAPTER -V Page No : 64

**<u>பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (Goods and service Tax - GST)</u>**

பண்டங்கள் மற்றும் பணிகள் வரி என்பது மறைமுக வரிகளில் ஒன்றாகும். இவ்வரி இந்தியப் பாரளுமன்றத்தில் மார்ச் 29, 2017 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. மேலும் ஜுலை 1, 2017 முதல் அமுல்படுத்தப்பட்டு செயல்பட்டுவருகிறது. இதன் குறிக்கோள் ஒரு நாடு ஒரு அங்காடி ஒரு வரி என்பதாகும்.

GST என்பது நுகர்வோர் பண்டங்கள் அல்லது பணிகளை வாங்கும் போது விதிக்கப்படும் வரியாகும். இவ்வரி மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களால் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு விதிக்கப்படும் அனைத்து மறைமுக வரிகளையும் மாற்றுவதை நோக்கமாக கொண்டுள்ளது. பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி மற்றும் வழங்குதல் மீதான மற்றும் பணிகளை உற்பத்தி மற்றும் வழங்குதல் மீதான வரிகளின் அடுக்கு விளைவுகளை நீக்குகிறது. இது மதிப்பு கூட்டப்பட்ட வரி VAT போன்று பலமுனை வரி இல்லாமல் இது ஒரு முறை வரி ஆகும்.

**<u>பண்டங்கள் மற்றும் பணிகளின் வரியின் அமைப்பு GST மாநில பண்டங்கள் மற்றும் பணிகள் வரி SGST மாநிலத்திற்குள்</u>** மதிப்புக் கூட்டுவரி VAT / விற்பனை வரி, கொள்முதல் வரி, பொழுதுபோக்கு வரி, ஆரம்பர வரி, பரிசுச்சீட்டு வரி மற்றும் மாநில கூடுதல் கட்டணம் மற்றும் வரிகள்.

**<u>மத்திய பண்டங்கள் மற்றும் பணிகள் வரி SGST (மாநிலத்திற்குள்)</u>** : மத்திய சுங்கத்தீர்வை, சேவை வரி, ஈடுசெய்வரி, கூடுதல் ஆயத்தீர்வை, கூடுதல் கட்டணம், கல்வி கட்டணம் (இடைநிலைக் கல்வி மற்றும் மேல்நிலைக் கல்வி வரி)

**<u>ஒருங்கிணைந்த பண்டங்கள் மற்றும் பணிகள் வரி IGST (மாநிலங்களுக்கு இடையே)</u> :** நான்கு முக்கிய GST விகிதங்கள் உள்ளன 5%, 12%, 18% மற்றும் 28% காய்கறிகள் மற்றம் உணவு தானியங்கள் போன்ற வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசிய தேவைகளுக்கான அனைத்து பண்டங்களுக்கும் இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றன.

**<u>வரி எவ்வாறு விதிக்கப்படுகிறது</u> :** வளர்வீத வரி விதிப்பு முறை, வகித வரி வதிப்பு முறை மற்றும் தேய்வுவீத வரி விதிப்பு முறை என அரசாங்கம் வரிகளை விதிக்கின்றன.

**<u>வளர்வீத வரி விதிப்பு முறை :</u>** வளர்வீத வரி விதிப்பு முறையில் வரியின் அடிப்படைத்தளம் அதிகரிக்கும் போது (பெருக்கப்படும்) வரி விகிதமும் (பெருகி) அதிகரிக்கிறது. வரி விகிதத்தை வரி அளவுடன் பெருக்குவதன் மூலம் செலுத்த வேண்டிய வரியின் அளவு கணக்கிடப்படுகிறது. ஒரு வளர்வீத வரியைப் பொறுத்த வரையில் பெருக்கல் (வருமானம்) அதிகரிக்கிறது. வருமானம் அதிகரிக்கும் போது வரிவிகிதமும் அதிகரிக்கிறது. இது வளர்வீத வரி விதிப்புமுறை என்று அழைக்கப்படுகிறது.

**<u>எடுத்துக்காட்டு</u>**

வரி அடிப்படை ரூ.10,000 - வரிவிகிதம் 10% வரிஅளவு ரூ.1000  
வரி அடிப்படை ரூ.20,000 - வரிவிகிதம் 15% வரிஅளவு ரூ.3000  
வரி அடிப்படை ரூ.30,000 - வரிவிகிதம் 25% வரிஅளவு ரூ.7500  
வரி அடிப்படை ரூ.40,000 - வரிவிகிதம் 40% வரிஅளவு ரூ.16000

**<u>விகித வரிவிதிப்பு முறை அல்லது விகிதாச்சார வரி விதிப்பு முறை</u>**

ஒரு நிலையான அளவில் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு விதிக்கப்படும் வரி, விகித வரி விதிப்பு முறை எனப்படுகிறது. அனைத்து வரி செலுத்துவோரும் தங்கள் வருமானத்தில் அதே விகிதத்தில் பங்களிப்பு செய்கின்றனர். இந்த முறையில் வருமானத்தின் அளவைப் பொருட்படுத்தாமல் வரி விதிப்பு விகிதம் ஒரே மாதிரியானதாகும். பெறப்பட்ட வரித்தொகை வருமானத்தின் அதே விகிதத்தில் மாறுபடும் எடுத்துக்காட்டு

வரி அடிப்படை ரூ.10,000/- வரிவிகிதம் 10% வரி அளவு ரூ. 1000  
வரி அடிப்படை ரூ.20,000/- வரிவிகிதம் 10% வரி அளவு ரூ. 2000  
வரி அடிப்படை ரூ.30,000/- வரிவிகிதம் 10% வரி அளவு ரூ. 3000  
வரி அடிப்படை ரூ.40,000/- வரிவிகிதம் 10% வரி அளவு ரூ. 4000

**தேய்வுவீத வரி விதிப்பு முறை :** இது அதிக வருமானம் ஈட்டுபவர்களை விட குறைந்த வருமானம் ஈட்டுபவர்களை விட குறைந்த வருமானம் ஈட்டுபவர்களிடம் அதிக வரி விகிதம் விதிப்பதைக்குறிக்கிறது. இது

வளர்வீத வரி விதிப்பு முறைக்கு நேர் எதிர் மாறானதாகும்.

**வளர்வீத வரி விதிப்பு :** வருமானம் அதிகரிப்பு - வரியும் அதிகரிக்கும் (எ.கா) : வருமான வரி

**விகித வரிவிதிப்பு :** வருமானம் அதிகரிப்பு - வரி குறையும் (எ.கா) : நிறுவன வரி

**தேய்வுவீத வரிவிதிப்பு :** வருமானம் மாற்றம் – எப்போதும் ஒரே வரி (எ.கா) : விற்பனை வரி

**கருப்புப் பணம் (Black Money) :** கருப்புப் பணம் என்பது கருப்பு சந்தையில் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் செலுத்தப்படாத வரிப் பணமாகும். வரி நிர்வாகியிடமிருந்து மறைக்கப்பட்ட கணக்கிடப்படாத பணம் "கருப்புப் பணம்" என்று அழைக்கப்படுகிறது.

**கருப்பு பணத்திற்கான காரணங்கள்** :

கருப்பு பணத்திற்கு பல ஆதாரங்கள் காரணங்களாக அடையாளம் காணப்படுகின்றன.

**1. பண்டங்கள் பற்றாக்குறை :** கருப்பு பணம் இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ பண்டங்கள் பற்றாக்குறை ஏற்படுவதற்கு மூலகாரணமாக உள்ளது கருப்பு பணத்தை கட்டுப்படுத்துவதற்கு அடுத்தடுத்து தடைகள் அறிமுகப்படுத்தப்படுகிறது.

**2. உரிமம் பெறும்முறை :** கட்டுப்பாட்டு அனுமதி, ஒதுக்கீடு மற்றும் உரிமங்களின் அமைப்பு, பொருட்களின் குறைவான அளிப்பினால் தவறான விநியோகத்துடன் தொடர்புடையது என்று உறுதியாக நம்பப்படுகிறது இதன் விளைவாக கருப்பு பணம் உருவாகிறது.

**3. தொழில் துறையின் பங்கு :** கருப்பு பணம் தோன்றுவதற்கு மிக முக்கியமான பங்கு வகிப்பது தொழில் துறையாகும் உதாரணமாக வரையறுக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களின் கட்டுப்பாட்டாளர் பண்டங்களை மிகவும் குறைவான விலைக்கு வாங்க முயற்சி செய்வதுடன், அப்பொருளுக்கு அதிக கட்டணம் வசூலிப்பதுடன், அவ்வித்தியாசத்தை தனிப்பட்ட முறையில் காண்பிப்பதில்லை.

**4. கடத்தல் :** கருப்பு பணத்திற்கு கடத்தல் ஒரு முக்கிய ஆதாரமாகும் இந்தியா கடுமையான பரிமாற்ற முறைகளைக் கொண்டிருக்கும்போது விலை உயர்ந்த பொருட்களான தங்கம், வெள்ளி, ஜவுளிகள், மின்னனுப்பொருள்கள் ஆகியவற்றுக்கு சுங்கத்தீர்வை அதிகமாக விதிக்கப்பட்டது அதிகாரிகளை மீறி இந்த பொருட்களைக் கொண்டு வருவது கடத்தலாகும்.

**5. வரியின் அமைப்பு :** வரிவிகிதம் அதிகமாக இருக்கும் போது கருப்பு பணம் தோன்றக்காரணமாக அமைகிறது.

**இந்தியாவில் கருப்புப் பணத்தைக் கட்டுப்படுத்த சமீபத்திய சட்ட முயற்சிகள் :**

1. மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் இரண்டு முன்னாள் நீதிபதிகளின் தலைவர் மற்றும் துணை தலைவரின் கீழ் கருப்பு பணம் குறித்த சிறப்பு விசாரணைக்குழு (Special Investigation Team) அமைக்கப்பட்டது.
2. ஒரு விரிவான சட்டத்தை இயற்றுவது கருப்புபணம் (வெளியிடப்படாத வெளிநாட்டு வருமானம் மற்றும் சொத்துக்கள்) மற்றும் வரி விதித்தல் சட்டம், 2015
3. பனாமாவில் சமீபத்திய காகித கசிவுகளின் வெளிப்பாடுகளை விசாரிப்பதற்காக மத்திய நேரடி வரி வாரியம் (CBDT) இந்திய ரிசர்வ் வங்கி (RBI) அமலாக்க இயக்குனரகம் (ED) மற்றும் நிதி புலனாய்வு பிரிவு (FIU) ஆகியவற்றை உள்ளடக்கிய அரசியலமைப்பு அதிகாரிகளை கொண்ட பல நிறுவனக்குழு (MAG) அமைக்கப்பட்டது.
4. இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தங்கள் (CBDT) வரித் தகவல் பரிமாற்ற ஒப்பந்தங்கள் பலதரப்பு மாநாடு
5. வெளிநாட்டு கணக்கு வரி இணக்கச் சட்டம்.
6. பண மோசடி சட்டம் 2002 மூலம் நிதிச்சட்டம்
7. பினாமி பரிவர்த்தனைகள் தடை திருத்தச்சட்டம் 2016 தொடக்கம்.
8. ‘‘சுத்தமான பணச்செயல்பாடு’’ ஜனவரி 31, 2017ல் தொடங்கியது.
9. லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம்
10. ரியல் எஸ்டேட் (ஒழுங்கு முறை மற்றும் மேம்பாடு) சட்டம் 2016

**<u>வரி எய்ப்பு (Tax Evasion) :</u>** தனி நபர்கள், நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகள் ஆகியவை சட்ட விரோதமாக வரி செலுத்தாமல் இருப்பது வரி ஏய்ப்பு எனப்படும் வரி ஏய்ப்பு பெரும்பாலும் வரி செலுத்துவோர் தங்கள் வரி பொறுப்பைக் குறைக்க வரி அதிகாரிகளிடம் தங்களின் உண்மையான விவகாரங்களை வேண்டுமென்றே தவறாக சித்தரிப்பதை உட்படுத்துகிறது. மேலும் குறைந்த வருமானம் இலாபங்கள் அல்லது ஆதாயங்களை உண்மையில் சம்பாதித்த தொகையைவிட அறிவித்தல் அல்லது விலக்குகளை மிகைப்படுத்துதல் போன்ற நேர்மையற்ற வரி அறிக்கையையும் உள்ளடக்கியது.

வரி எய்ப்பு என்பது பொதுவாக முறைசாரா பொருளாதாரத்துடன் தொடர்புடைய ஒரு செயலாகும். வரி எய்ப்பு அளவின் ஒரு நடவடிக்கை, பதிவு செய்யப்படாத வருமானத்தின் அளவு, வரி அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்படவேண்டிய வருமான அளவிற்கும் உண்மையான அறிக்கையிடப்பட்ட தொகைக்கும் உள்ள வித்தியாசமாகும்.

**<u>வரி எய்ப்பு நடவடிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளவை</u>**

- ❖ வருமானத்தை குறைத்து மதிப்பிடுதல்
- ❖ விலக்குகள் அல்லது செலவுகளை உயர்த்துவது
- ❖ மறைக்கப்பட்ட பணம்
- ❖ கடல் கடந்த கணக்குகளில் விவரங்களை மறைத்தல்.

**<u>வரி ஏய்ப்பிற்கான காரணங்கள் :</u>**

1. கருப்பு பணத்தின் விளைவாக வரி ஏய்ப்பு மத்திய அரசின் வரி திரட்டல் முயற்சிகளைத் தடுக்கிறது. நிதிப் பற்றாக்குறை வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்துவதை சிதைக்கிறது மற்றும் பொதுச் செலவுகள் தவிர்க்க முடியாததாக இருந்தால், பற்றாக்குறை நிதியுதவியை நாடும்படி அரசாங்கத்தை கட்டாயப்படுத்துகிறது.

2. இது சேமிப்பு மற்றும் முதலீட்டு முறைகளை சிதைப்பதன் மூலமும், பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கான வளங்களின் கிடைக்கும் தன்மையினாலும், அரசாங்கத்தின் அறிவிக்கப்பட்ட பொருளதாரக் கொள்கையில் தலையிடுகிறது.

3. வரி ஏய்ப்பு, வரி அமைப்பின் சமத்துவப் பண்புகளை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. நேர்மையான வரி செலுத்துவோர் விகிதாசார வரிச்சுமையை விருப்பத்துடன் சுமக்கிறார்கள். அவர்களை மனச்சோர்வடையச் செய்து வரி ஏய்ப்பு செய்பவர்களின் முகாமில் சேர ஈர்க்கப்படுகிறார்கள்.

4. வரி ஏய்ப்பு மற்றும் கருப்புபணம் ஆகியவை நாட்டில் தகுதியற்ற குழுக்களின் கைகளில் பொருளதார சக்தியைக்குவிப்பதை ஊக்குவிக்கின்றன. இது பொருளாதாரத்தை அதன் வழியில் அச்சுறுத்தலாகும்.

5. வரி ஏய்ப்பு, வரி நிர்வாகத்தின் நேரத்தினையும், சக்தியினையும் பயன்படுத்தி வரி ஏமாற்றுக்காரர்களின் சிக்கலான கையாளுதல்களைத் தடுக்கிறது.

**<u>வரி ஏய்ப்பும் அபராதமும் :</u>**

1. ஒரு நபர் வரி ஏய்ப்பு செயலை முழுமையாகச் செய்தால் அவர் மோசமான குற்றச்சாட்டுகளை சந்திக்க நேரிடும். வரி ஏய்ப்பு அபாரதங்களில் ஐந்து ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், அதிக அளவு அபராதமும் அடங்கும்.
2. பிரதிவாதிகள், வழக்கு விசாரணைக்கான செலவுகளைச் செலுத்த உத்தரவிடப்படலாம்.
3. பிற வரி ஏய்ப்பு, அபராதங்களில் சமூக சேவை, நன்னடத்தை மற்றும் வழக்கின் சூழ்நிலைகளைப் பொறுத்து மறுசீரமைத்தல் ஆகியவை அடங்கும்.
4. வரி ஏய்ப்பு அபராதம், குற்றத்தின் தன்மை மற்றும் அதன் தீவிரத்தைப் பொறுத்து கடுமையானதாக இருக்கும்.

**<u>வரி மற்றும் பிற கட்டணங்கள் :</u>** வரி என்பது வரி செலுத்துவோர் நேரடி வருவாய் அல்லது நன்மை என்று எதையும் எதிர்பாராமல் அரசாங்கத்திற்கு கட்டாயமாக செலுத்திடும் கட்டணமேயாகும். பொது நிறுவனங்களின் பொருள்கள் மற்றும் பணிகளின் உற்பத்தி மற்றும் பங்கீடு செய்தல் போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட வருவாய் ஆகியவை கட்டணங்களில் அடங்கும் வரி வருமானம் தவிர்த்து வரி அல்லாத மூலதனங்களிலிருந்து பெறக்கூடியவை கட்டணங்கள் ஆகும். சில செலுத்துதல்கள், கட்டணங்கள் அபராதங்கள் தண்டனைகள் மற்றும் பறிமுதல்கள் ஆகும்.

தொடரும்...

R. சந்தோஷ் குமார், ME,MCA,MBA
வெளியீட்டுச் செயலாளர்/மின்அலை

## கேள்வி - பதில் :

**1. எந்தவொரு நாட்டைக் காட்டிலும் அமெரிக்க டாக்டர்கள் திறமையானவர்கள் என்பது எந்த அளவுக்கு உண்மை ?**

ஓரளவுக்கு உண்மைதான். உலகத்திலேயே மருத்துவ விஞ்ஞானத்தில் சாதனை படைத்து, முதல் இடத்தில் இருக்கிற நாடு அமெரிக்காதான். அதற்கு காரணம் கடந்த நாற்பது வருடத்தில் மருத்துவ ரீதியான உண்மைகளைக் கண்டுபிடித்த 10 விஞ்ஞானிகளில் ஒன்பது பேர் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள். மருத்துவதுறையில் அதிக நோபல் பரிசு பெற்ற நாடும் அமெரிக்காதான். இதன் காரணமாய் அங்கே ஒவ்வொரு மாதமும் புதிய புதிய மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு, உரிய அங்கிகாரம் பெறப்பட்டு மருத்துவமனைகளில் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படுகிறது. அதேபோல் அதிநவீன மருத்துவ சாதனங்களும், மருத்துவ நிபுணர்களும் அமெரிக்காவில் அதிகம். அமெரிக்காவில் டாக்டர் படிப்பு என்பது சாதாரண விஷயமில்லை இந்தியாவில் எம்.பி.பி.எஸ் பட்டம் பெறுகிற மாதிரி அமெரிக்காவில் ஐந்து வருடம் படித்துவிட்டு எளிதில் டாக்டர் பட்டம் வாங்கிவிட முடியாது. அங்கேயும் பள்ளிப்படிப்பு 12 வருடங்கள் படிக்க வேண்டும். அதன்பிறகு பிரிப்பரேஷன் ஸ்டடி (PREPARATION STUDY) எனப்படும் மூன்று வருட ஆயத்தப்படிப்பு படிக்க வேண்டும்.

அதன்பிறகு ஐந்து வருடகாலம் எம்.டி என்கிற மருத்துவப்படிப்பைத் தொடரவேண்டும். இந்த 8 வருட காலப்படிப்பை ஒரு மாணவர் அரியர்ஸ் இல்லாமல் முடித்திருந்தால் மட்டுமே ஒரு குறிப்பிட்ட துறையில் ஸ்பெஷலிஸ்ட் படிப்பைப் படிக்கமுடியும். தரமான, திறமையான மருத்துவர்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பது அமெரிக்க அரசின் விருப்பம். அதனால் டாக்டருக்குப் படிக்கிற மாணவர்களின் எண்ணிக்கையைக் கணிசமாகக் குறைத்து தேர்வுமுறையைக் கடுமையாக்கிவிட்டது அமெரிக்க அரசு. அமெரிக்காவில் உள்ள எல்லா மருத்துவமனைகளுமே அரசின் கண்காணிப்பில் உள்ள கம்ப்யூட்டர்களின் கட்டுப்பாட்டில் இருப்பதால் தவறுகள் நடக்க வாய்ப்பில்லை. பெண்களுக்கான ஒரு மருத்துவமனை அமெரிக்காவின் ஃபினிக்ஸ் நகரில் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த மருத்துவமனையின் பெயர் பேன்னர் ஹெல்த் (BANNER HEALTH). அமெரிக்காவின் மிக்பெரிய மருத்துவமனைகளில் இதுவும் ஒன்று. இந்த மருத்துவமனையில் டாக்டர்களையும் சேர்த்துப் பணியாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை 47 ஆயிரம் பேர் ஆகும்.

**2. நம் உடலில் சுரக்கும் ஒரு ஹார்மோனில் பய அமிலம் உள்ளதாக சொல்லப்படுகிறதே?**

அந்த பய அமிலத்திற்கு பெயர் அட்ரின்லின் (ADERNALINE). நாம் சிறுநீரகங்களின் இரண்டு புறத்திலும் மேல்பக்கங்களில் தொப்பி போன்ற அட்ரினல் சுரப்பிகள் உள்ளன. நாம் எதையாவது பார்த்து பயந்தாலோ அதிர்ச்சியான செய்திகளைக் கேட்டாலோ இந்தச் சுரப்பிகள் ஒரு மைக்ரோ விநாடி நேரத்தில் அட்ரினலின் என்னும் நீரைச் சுரக்கின்றன. அந்த நீர் அந்த விநாடியே ரத்த ஓட்டத்தில் கலந்து ஏதோ ஆபத்து என்ற அறிவிப்பை மூளைக்குத் தெரிவிக்கின்றன. உதாரணமாக ஏதேனும் ஒரு வாகனம் மோத வரும்போது, சட்டென்று நகர்ந்து தப்பித்துக்கொள்ளும் ஒருவர் மயிரிழையில் தப்பித்தேன் என்று சொல்லுவார். அவர் அப்படித் தப்பித்துக் கொண்டதற்குக் காரணம் வரப்போகின்ற ஆபத்தை உணர்ந்து அட்ரினல் சுரப்பிகள் அட்ரினலினை சுரந்து இரத்தத்தில் கலக்க வைத்து மூளைக்குத் தெரியப்படுத்துவதால்தான்.

**3. புறாவை மட்டும் எப்படி தூது போகத் தேர்ந்தெடுத்தார்கள் ?**

ஒவ்வொரு பறவைக்கும் ஒவ்வொரு திறமை. புறாவிடம் இருக்கும் திறமை அதனுடைய ஞாபகசக்தியும், களைப்பில்லாமல் பறக்கும் அதன் ஆற்றலும் தான். பொதுவாக எல்லாப் புறாக்களுமே முன்பின்

அறிமுகமில்லாத இடங்களுக்கும் நாடுகளுக்கும் பறந்து சென்றுவிட்டு தங்களது இருப்பிடங்களுக்கு திரும்பி வந்து சேரக்கூடிய அதிபுத்திசாலித்தனம் அதன் பிறவியிலேயே உண்டு. புறாக்களில் மிகவும் சிறப்பானவை ஹோமர் எனப்படும் புறாக்கள். இந்த ஹோமர் புறாக்கள் ஒரு நகரத்தின் மேல் ஒரு தடவை பறந்துவிட்டால் போதும் தன் ஆயுட்காலம் முழுவதும் அந்த நகரத்தை மறக்காமல் ஞாபகம் வைத்திருக்கும். சூரியன் எந்தெந்த வேளையில் எந்த இடத்தில் இருக்கும் என்பதையும் காற்று எந்தெந்த மாதங்களில் எந்த திசையில் வீசும் என்பதையும் கணித்து வைத்துக்கொள்ளக்கூடிய ஒரே பறவை புறா மட்டுமே. ஆயிரம் கிலோமீட்டர் வரை உணவு எடுத்துக்கொள்ளாமல் எங்கேயும் உட்காராமல் பறக்கக்கூடிய ஆற்றல் இதற்கு இருப்பதால் மன்னர்கள் காலத்திலும் சரி இந்த கம்ப்யூட்டர் காலத்திலும் சரி புறாவை தூது விட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்படி புறாக்கள் களைப்பின்றிப் பறப்பதற்கு காரணம் காரினேட்ஸ் (CARINATES) எனப்படும் அமைப்பைக் கொண்ட சிறகுகள் இருப்பதுதான். புறாக்கள் கதிர்வடிவம் உடையவை. புறாவின் அலகு மற்ற பறவைகளின் அலகைக் காட்டிலும் வேறுபட்டது. அதாவது அலகுகளின் மேற்புறத்தில் ரம்போதீக்கா (RHAMPHOTHECA) என்னும் தடித்த உறை உள்ளது. புறாவின் வால்பகுதியில் யூரோபைஜியால் சுரப்பி (UROPYAGIAL GLAND) உள்ளது. இதிலிருந்து சுரக்கும் ஒருவித எண்ணெய்ப் பொருள் இறகுகளைப் பாதுகாக்கிறது.

## திருமண அழைப்பிதழ்



மணமகன்
**திரு.மா.க.குமார்**, TNEB
**திருமதி.கு. சித்ரா** B.Sc., B.Ed.,
ஆகியோரின் மகன் திருநிறைச்செல்வன்
**கு.கபிலன்**, B.E.,
என்கிற மணமகனுக்கும்

மணமகள்
**திரு.சீ.சந்திரசேகரன்** M.A.
**திருமதி.ச.சாந்தி**, B.Sc., B.Ed.,
ஆகியோரின் மகள் திருநிறைச்செல்வி
**ச.கீர்த்தனா**, B.E,
என்கிற மணமகளுக்கும்

**சுபமுகூர்த்தம் :**01.02.2023 புதன் கிழமை காலை 9.00 மணிக்குமேல் 10.00 மணிக்குள்

**இடம் : பூங்கொடி திருமண மண்டபம்,** அதிரை ரோடு, முக்கூட்டுச்சாலை, மதுக்கூர்,

**திருமண வரவேற்பு : 31.01.2023 செவ்வாய்கிழமை**
**மாலை 6.00 மணியளவில்**
**இடம் : பூங்கொடி திருமண மண்டபம்,**
அதிரை ரோடு, முக்கூட்டுச்சாலை, மதுக்கூர்,

**அழைத்து மகிழும் : பொர்.மா.க. குமார்,** Branch President , TNEBES, Thanjavur Branch

**மணமக்கள் எல்லா வளமும் பெற்று வாழ பொறியாளர் சங்கம் வாழ்த்துகிறது**

மின் அலை வளர்ச்சி நிதி ரூ.1,000/– அளித்துள்ளார், நன்றி

When you reach the end of what you should know,
you will be at the begining of what you should sense.
- Kahlil Gibran

## இயந்திரவியல் (Robotics) :

தொழிற்சாலைகளில் பயன்படும் இயந்திரங்கள், இயந்திர வாகனங்கள், தானாக இயங்கும் இயந்திர மனிதர்கள் என பலதரப்பட்ட இயந்திரங்களை உறுவாக்கம் மற்றும் ஆய்வறியும் இயல் ஆகும்.

## தலைமுறைகள் (Generation) :

பேராசிரியர் மார்வேக் எந்திர மனிதவியலை நான்கு தலைமுறைகளாக (Four Generation) வகைப்படுத்தியுள்ளார். அவை 2010 இல் உருவாக்கப்பட்ட முதல் தலைமுறை எந்திர மனிதவியல், பல்லியின் அறிவைப் பெற்றிருக்கிறது. என்றும் 2020 இல் உருவாக்கப்பட்டுள்ள இரண்டாம் தலைமுறை இயந்திர மனிதவியல் சுண்டெலியின் சம அறிவுள்ள அறிவைப்பெற்று இருக்கிறது என்றும் 2030 இல் உருவாக்கப்படும்ட மூன்றாம் தலைமுறை இயந்திர மனிதவியல் குரங்கின் அறிவை பெற்று இருக்கும் என்றும் 2040–2050 இல் உருவாக்கப்படும் நான்காம் தலைமுறை இயந்திர மனிதவியல் மனிதனுக்கு சமமான அறிவை பெற்று இருக்கும் என்பது அவர் கருத்து.

## நானோ தானியங்கியல் (Nano Robotics) :

நானோ தானியங்கியல் என்பது நானோ மீட்டர் (10–9 மீட்டர் அளவிலான மிக நுண்ணிய இயந்திரங்கள் பற்றிய இயல் ஆகும். இதனை உயிரியல் துறையில் பெரிதும் பயன்படுத்தலாம்.

## நானோ அணுகுமுறைகள் :

1. பயோசிப் (BIOCHIP)
2. நுபாட் (NUBOTS) அல்லது நானோ மரபணு
3. பாக்டிரியால் அடிப்படையில் நானோ மருந்து (NANO MEDICINE)

நானோ தானியங்கி மிக நுண்ணியதாக இருப்பதினால் நுட்பமான பணிகளுக்கு பயன்படுத்தப்படும். நானோ தொழில் நுட்பத்தினால் பல ஆச்சரியப்படும் நுண் பணிகளை செய்யமுடியும் என்று அறிவியல் அறிஞர்கள் கூறுகிறார்கள்.

## (ROBOTICS PROCESS AUTOMATION (RPA) :

நமது அன்றாட வாழ்வில் இந்த RPA இன்றியமையாத பல பணிகளைச் செய்கிறது. இந்த RPA என்பது Electrical, Electronics, Computer Science மற்றும் Mechanical Engineering ஆகியவற்றின் கூட்டுச் செயல்பாடாகும்.

உதாரணமாக A என்னும் ஒரு நபர் அலுவலகத்தில் கணக்காளராக வேலை செய்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவருக்கு ஒரு நாளில் பல விதமான Invoices, Monitory Transactions, Liabilites, Checks போன்றவற்றை அவர் கையாளவேண்டியுள்ளது. இதில் அவர் செய்யும் முக்கியமான பணி என்னவென்றால் மேற்கண்ட Invoice களில் இருந்து அவர் தகவல்களை Excel Sheet ல் சேமிக்க வேண்டியுள்ளது. அவர் கீழ்கண்ட தகவல்களை Invoices களிலிருந்து சேமிக்கிறார்.

1. Name of the Company, 2. Invoice ID, 3. Date of Processing ஆகிய தகவல்களோடு மற்ற சில நிதி விவரங்களையும் இணைத்து அவர் தனது மேலதிகாரிக்கு அறிக்கையை அனுப்பிவைக்கிறார். இவ்வாறாக இந்த வேலையானது நேரத்தை அதிகமெடுப்பதுடன் திரும்ப திரும்ப நடைபெறும் ஒரு செயலாகவும் உள்ளது.

மேற்கண்ட செயல்கள் அனைத்தும் ஊழியர் இல்லாமலேயே தானாகவே ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் செம்மையாக நடைபெற்றால்? ஆம் அது சாத்தியமே ROBOTIC PROCESS AUTOMATION எனப்படும். ஒரு தொழில் நுட்பத்தின் மூலமாக நாம் மேற்கண்ட செயல்கள் அனைத்தையும் தானியியங்கி முறையில் மிக நேர்த்தியாக செயல்படுத்த முடியும்.

இதன் மூலமாக ரோபோக்கள் நிறுவனத்திற்கு வரும் அனைத்துவிதமான Invoice களையும் திரட்டி அதனுடன் கூடவே நிதி அறிக்கைகளையும் இணைத்து நாள்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் தனது

மேலதிகாரிக்கு எலக்ட்ரானிக் மெயில் (E-Mail) அனுப்புகிறது.

## WHAT IS ROBOTIC PROCESS AUTOMATION :

ROBOTIC PROCESS AUTOMATION என்பது ARTIFICIAL INTELLIGENCE மற்றும் MACHINE LEARNING இவை இரண்டும் இணைந்து திரும்ப திரும்ப மனிதர்கள் செய்யும் செயல்களை தானியங்கி முறையில் எளிமைப்படுத்த பயன்படும் ஒரு தொழில்நட்பமாகும். இவைகள் தானியங்கி முறையில் கீழ்கண்ட செயல்களை எளிமையாக்கப் பயன்படுகிறது.

1. ADDRESSING QUERIES, 2. MATHEMATICAL CALCULATIONS, 3. MAINTENANCE OF RECORDS, 4. PERFORMING TRANSACTIONS

**FOUR PHASES OF RPA :** 1. PLANNING PHASE, 2. DEVELOPMENT PHASE, 3. DEVELOPMENT & TESTING PHASE, 4. SUPPORT AND MAINTENANCE PHASE.

**PLANNING PHASE** : இது ஒவ்வொரு செயல்களையும் தானாகவே தானியங்கி முறையில் இயங்குகிறதா என்று பார்ப்பது இதனுடைய வேலையாகும். மேலும் TEST OBJECTS மற்றும் அதனடைய IMPLEMENTATIONS METHOD போன்றவற்றையும் இந்த நிலையில் நிகழ்த்துகிறது.

**DEVELOPMENT PHASE** : இது தானியங்கி செயல்கள் அனைத்தும் தொடர்ச்சியாக செயல்படுகிறதா என்று கண்காணிக்கிறது.

**DEVELOPMENT & TESTING PHASE** : இங்கே தானியங்கி செயல்களில் ஏதாவது பிரச்சனை மற்றும் சிக்கல் ஏற்படுகிறதா என்று மேற்பார்வையிடுகிறது.

**SUPPORT AND MAINTENANCE PHASE** : சரியாக தானியங்கி முறையில் இயங்கும் செயல்கள் அனைத்தும் தொடர்ச்சியாக பயனர்களுக்கு UPDATE செய்யப்படுகிறது.

RPA TOOLS : RPA TOOLS அனைத்தும் தானியங்கி செயல்கள் அனைத்தும் சிறப்பாக செயல்படுத்தவும், மேலும் ஒழுங்குபடுத்துவதற்கும் பயன்படுகிறது. RPA TOOLS என்பது தானியங்கி செயல்களுக்கு துணைபுரியும் சில மென்பொருள்களேயாகும்.

**EXAMPLES OF RPA TOOLS** : 1. UIPATH SOFTWARE TOOL, 2. AUTOMATION ANYWHERE SOFTWARE TOOL, 3. BLUE PRISM SOFTWARE TOOL, 4. WORKFSION SOFTWARE TOOL, 5. PEGA SOFTWARE TOOL, 6. REDWOOD SOFTWARE TOOL

RPA தரத்தைப் பற்றி பேசும்பொழுது இது பிழையில்லாத பொருள்களை தானியங்கி முறையில் சிறப்பாக உற்பத்தி செய்கிறது. மேலும் இது OPERATION RISKS அனைத்தையும் குறைக்கிறது. இதனால் இந்த RPA TOOLS பயன்படுத்தும் பயனர்களுக்கு முழு மனநிறைவு ஏற்படுகிறது. மேலும் பொருள்களை கொண்டு சேர்க்கும் DELIVERY SERVICE போன்றவற்றிலும் RPA TOOLS சிறப்பாக செயல்பட்டு DELIVERY TIMING DELAY போன்றவற்றை குறைக்கிறது. மேலும் இது 24x7 முழு நேரமும் சிறப்பாக தானியங்கி முறையில் செயல்படுவதால் வாடிக்கையாளர்களுக்கு முழு மனநிறைவு ஏற்படுகிறது.

**EXAMPLES :** இந்த RPA TOOL களைப் பயன்படுத்தி NASCOM என்ற நிறுவனமானது 65% அதன் தேவையற்ற வீண் செலவினங்களைக் குறைத்துள்ளது. மேலும் இது TRAINING EMPLOYEE EASY SOFTWARE MIGRATION, IT RESOURCES போன்றவற்றையும் சிறப்பாக தானியங்கி முறையில் செய்கிறது.

RPA IN INDUSTRIES : ரோபோ தானியங்கி முறை (RPA) என்னும் தொழில் நுட்பமானது தற்காலத்தில் பல துறைகளில் பயன்படுகிறது. அதில் கீழ்கண்ட துறைகளில் அதன் பங்கு அதிகளவில் உள்ளது. (RPA) தொழில்நுட்பமானது 2016 ஆம் ஆண்டிலிருந்து சிறப்பான வளர்ச்சி அடைந்துவருகிறது. மேலும் 2020 ஆம் ஆண்டு முதல் கொரோனா என்னும் கொடிய நோயால் மனித உழைப்பு குறைந்துள்ள நிலையில் இந்த (RPA) தொழில்நுட்பத்தின் தாக்கம் மிகவும்

இன்றியமையாததாக உள்ளது. மிகவும் புகழ்பெற்ற அறிஞரான MICKINSEY என்பவருடைய கருத்துப்படி (RPA) தொழில்நுட்பமானது 2025 ஆம் ஆண்டிற்குள் பொருளாதாரத்தில் சுமார் 7 TRILLION DOLLAR அளவிற்கு வளர்ச்சியை ஏற்படுத்தும் என்று கூறுகிறார்.

**RPA USE IN INDUSTRIES EXAMPLES** :

1. BANKING AND FINANCE, 2. IT INTERNATION PROCESS, 3. HUMAN RESOURCES, 4. INSURANCE AGENCIES, 5. MARKETING AND SALES, 6. CUSTOMER RELATIONSHIP MANAGEMENT

**போக்குவரத்தில் RPA :** நாம் தினந்தோறும் செய்யும் வேலைகள் அனைத்தும் ROBOTICS PROCESS AUTOMATION யை பயன்படுத்தி மிக நேர்த்தியாக செய்ய இயலும் ROBOTICS ன் வளர்ச்சி நமது அன்றாட வாழ்க்கை முறையை ஒரு வழிகளில் இல்லாமல் பல வழிகளில் மாற்றி அமைத்துள்ளது.

**ARTIFICIAL INTELLIGENCE மற்றும் ROBOTICS :** இவை இரண்டின் வளர்ச்சி சமூகத்திலிருந்து நமது வீடு வரை ஒவ்வொரு நிலையிலும் வேறூன்றியுள்ளது. இதற்கு போக்குவரத்து மட்டும் விதிவிலக்கல்ல. போக்குவரத்திலும் இந்த ARTIFICIAL INTELLIGENCE மற்றும் ROBOTICS அதிகளவில் ஆதிக்கம் செலுத்துகிறது.

ஒரு விஷயத்தை திட்டமிட்டு நடத்துவது என்பது மனிதர்களுக்கு சற்று சிக்கலான மற்றும் நேரத்தை எடுக்கும் காரியமாகும். ஆகையால் ROBOTIC PROCESS AUTOMATION மூலமாக நாம் விமானநிலையம், போக்குவரத்து அமைப்புகள், சொகுசு உணவகங்கள் போன்ற அனைத்திலும் சிறப்பாக செயலாற்ற முடியும். இவ்வாறாக கூறும்பொழுது NELFAIR WEBSITE யை பயன்படுத்தி போக்குவரத்து துறையில் எளிமையான வளர்ச்சியும் மற்றும் பலவித புனரமைப்புகளும் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தரையை சுத்தம் செய்யும் பணிகளிலும், பயணிகளை அடர்ந்த குகைகளுக்கும், மலைகளுக்கும் நடுவில் இரயிலில் ஏற்றிச் செல்லவும் மேலும் விமானநிலையங்களிலும் ROBOTIC PROCESS AUTOMATION ன் தேவை அதிகளவில் பயன்படுகிறது. JOSIE PEPPER, TROIKA AND ROBIRD போன்ற ரோபோக்கள் விமானநிலையங்களில் தானாகவே சிறப்பாக AUTOMATION யை முனிச்சியோல், கனடா போன்ற நாடுகளில் செய்துவருகின்றன. இந்த வகையான ரோபோக்கள் சிறப்பான செயல்களை செய்வதற்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளன இவைகள் அனைத்தும் பயணிகளை வரவேற்பதற்கும், விமானத்தை பற்றி கூறுவதற்கும், வானிலை அறிக்கை வெளியிடுவதற்கும் மேலும் பறவைகள் விமானங்களோடு மோதி விபத்தை ஏற்படுத்தாமல் இருக்கவும் பயன்படுகிறது.

SITA ன் LEO எனப்படும் ரோபோ மற்றொரு வகையான ஒரு ரோபோ ஆகும். இது விமான நிலையங்களில் பரபரப்பான சூழ்நிலையில் பயனர்களின் LUGGAGE களை சரியாக எடுப்பதற்கு உதவுகிறது. அதைத்தவிர ரோபோக்கள் விமான நிலையங்களில் பொழுதுபோக்கிற்காகவும் பயன்படுகிறது. மினட்டா சான் ஜோஸ் சர்வதேச விமான நிலையத்தில் காணப்படும் PIPER AMELIA AND NORMA போன்ற ரோபோக்கள் பொழுதுபோக்கிற்காகப் (PLAY MUSIC, DANCE AND CLICK PICTURES) பயன்படுகிறது. குறிப்பாக ரோபோக்கள் அனைத்தும் விமான நிலையங்களில் பாதுகாப்பு தொழிலாளராக ஆயுதங்களை சோதிக்கவும் கண்டறியவும் (TO SCAN WEAPONS & DETECT WEAPONS) பயன்படுகிறது. நியூயார்க் நகரத்தின் LAGUARDIA விமான நிலையத்திலுள்ள KNIGHTSCOPE'S ROBOTS ஒரு சிறந்த பாதுகாப்பு ரோபோ ஆகும்.

விமான நிலையங்களைத் தவிர அனைத்துவிதமான உயர்ரக சொகுசு உணவகங்களும் தற்பொழுது RPA தொழில்நுட்பம் வாடிக்கையாளர் சேவையை ROBOTS & ARTIFICIAL INTELLIGENCE மூலமாக சிறப்பாக அளித்து வருகிறது. உணவு விடுதிகள் அனைத்தும் ரோபோவை RECEPTIONISTS, BELL BOYS, CLEANING STAFF போன்ற பணிகளில் ஈடுபடுத்துகிறது. இவ்வாறாக RPA தொழில்நுட்பத்தின் பணியானது மிகவும் முக்கியமாக பல துறைகளிலும் இன்றியமையாததாக உள்ளது.

R. **சந்தோஷ்குமார்,** ME, MCA, MBA
வெளியீட்டுச் செயலாளர் / மின் அலை

## முதல் சந்திப்பிலேயே நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்துவது தன்னம்பிக்கை

ஒரு நபரை நாம் அணுகும் விதம் நமது முதல் வார்த்தைகள் நமது முதல் நடவடிக்கைகள் ஆகியவை அந்த ஒட்டு மொத்த சந்திப்பும் எவ்வாறு அமையும் என்பதைக் கூறிவிடும். வேடிக்கையாகப் பேசுவதன் மூலம் நீங்கள் ஒருவருடன் ஒரு நேர்காணலைத் துவக்கினால் அந்த நேர்காணலை வேறொரு நிலைக்கு எடுத்துச் செல்வது மிகவும் கடினம் ஒரு வருடனான உங்கள் உரையாடல் எவ்வாறு நிறைவுற வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ அதே நிலையில் உங்கள் உரையாடலை துவங்க வேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொண்டால் அவருடைய நடவடிக்கைகளையும் மனப்போக்குகளையும் குறிப்பிடத்தக்க அளவுக்கு உங்களால் கட்டுப்படுத்த முடியும் அவர் உங்களை தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் உங்களுடைய முதல் ஒரு சில வார்த்தைகள் அதை அவருக்கு உணர்த்த வேண்டும் அது வியாபாரப் பேச்சு போன்று இருக்க வேண்டும் என்று விரும்பினால். ஒரு வியாபாரத் தொனியில் உங்கள் உரையாடலைத் துவங்குங்கள் அது ஒரு ஜனரஞ்சகமான உரையாடலாக இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், அந்த தொனியில் அதை துவங்குங்கள். சூழ்நிலைக்கு ஏற்ப அடுத்தவர் தன்னை பொருட்படுத்திக் கொள்வார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

உங்களுடைய முதல் வார்த்தைகளும் செயல்களும் மனப்போக்குகளும் அந்த சந்திப்பின் கருப்பொருளை தீர்மானிக்கின்றன என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

எந்த ஒரு விவாதத்திலும் ஈடுபடுவதற்கு முன்பு இதிலிருந்து உண்மையிலேயே நான் எதை விரும்புகிறேன் நான் இந்த சந்திப்பு முழுவதிலும் எந்த மனநிலையில் இருக்க விரும்புகிறேன் என்ற கேள்வியை நீங்களே உங்களிடம் கேட்டுக் கொள்வது சிறந்த பலனளிக்கும்.

மற்றவர்களின் நடவடிக்கைகளையும் மனப்போக்குகளையும் கட்டுப்படுத்துவதற்கான இன்னொரு வழி துவக்கத்தில் நம்மைப் பற்றி நாம் அவர்களிடம் ஏற்படுத்தும் அபிப்பிராயம் தான் இறுதிவரை அவர்கள் நம்மைப் பற்றி வைத்து கொள்ளவிருக்கின்ற ஒரு நிரந்தரமான அபிப்பிராயம் என்பதை நினைவில் வைத்துக்கொள்வது வழக்கமாக முதல் சந்திப்பே உங்களைப் பற்றி அடுத்தவருக்கு தெரிவித்து விடும்.

நீங்கள் மற்றவர்களால் எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படுகிறீர்கள் என்பதற்கு வேறு எவரொருவரையும் விட நீங்கள் தான் அதிக பொறுப்பாளி ஆவீர்கள். நம்மைப் பற்றி நாம் கொண்டுள்ள அபிப்பிராயத்தை கொண்டே உலகம் நம்மை பற்றிய அபிப்பிராயத்தை உருவாக்கிக் கொள்கிறது என்பதை வெகுசிலரே உணர்கின்றனர் புவியீர்ப்பு விதியை போன்றே இதுவும் ஓர் உறுதியான உளவியல் விதியின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

உங்கள் மீது நீங்கள் காட்டுகின்ற மதிப்பை விட உங்கள் வேலை உங்கள் நடவடிக்கைகள் உங்கள் தொழில் மற்றும் உங்களுடைய போட்டி ஆகியவற்றின் மீது நீங்கள் எவ்வாறு மதிப்பு வைக்கிறீர்கள் என்பதை வைத்து மக்கள் உங்களை எடை போடுகின்றனர்.

உங்கள் போட்டியாளர்கள் உட்பட அடுத்தவர்களை பற்றி தரக்குறைவாக பேசுபவர்களை யாருக்கும் பிடிப்பதில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்களை பற்றிய நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்த விரும்பினால் அடுத்தவரையோ அல்லது அவருடைய பொருளையோ பற்றி ஒருபோதும் இழிவாக பேசாதீர்கள்.

❖ நீங்கள் மற்றவர்களை கையாளும்போது உரையாடலின் துவக்கத்திலேயே அந்த ஒட்டுமொத்த உரையாடலும் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை நிர்ணயித்து விடுங்கள்

❖ நீங்கள் ஒரு சந்திப்பை தோழமையுடன் துவங்கினால் அந்த ஒட்டுமொத்த சந்திப்பும் தோழமையானதாக அமையும்.

❖ முதன்முறையாக நீங்கள் ஒருவரை சந்திக்கும்போது அவர்கள் உங்களை பற்றி தன் மனதில் உருவாக்கிக் கொள்ளும் அபிப்பிராயம் உங்களது எஞ்சிய வாழ்நாள் முழுவதும் அவர் உங்களை எவ்வாறு நடத்துவார் என்பதை தீர்மானிக்கிறது.

❖ உங்கள் சொந்த மதிப்பீட்டின் படியே மற்றவர்கள் உங்களை ஏற்றுக் கொள்கின்றனர். நீங்கள் முக்கியமானவர் அல்ல என்று நீங்கள் நினைத்தால் மற்றவர்கள் உங்களை உதாசீனப்படுத்த வேண்டும் என்று நீங்கள் அவர்களை கேட்டுக் கொள்கிறீர்கள் என்று அர்த்தம் அடுத்தவரை உங்களைப் பற்றிய நல்ல அபிப்பிராயம் கொள்ள வைப்பதற்கான சிறந்த வழிகளில் ஒன்று அவரைப் பற்றி நீங்கள் நல்ல அபிப்பிராயம் கொள்ள துவங்கியிருக்கிறீர்கள் என்பதை அவருக்கு தெரியப்படுத்துவதுதான்.

**பொர்.V.S.சம்பத்குமார்** / பொதுச்செயலாளர்

## மனசே ரிலாக்ஸ் :

தொடர்.6 **முனைவர். சா. சம்பத்,** தேசிய பயிற்சியாளர்,
தஞ்சை மண்டல செயலாளர்

சென்ற இதழில் மன அழுத்த அளவினை தெரிந்துகொள்ள வினாப்படிவத்தை நிரப்பி உங்கள் மன அழுத்த நிலையினை தெரிந்து கொண்டீர்கள். இப்போது அதனை கட்டுப்படுத்த செய்ய வேண்டியன பற்றி அறிவோம்.

### மன அழுத்தத்தை கட்டுப்படுத்த பயிற்சிகள் :

ஒரு நாளைக்கு 30 நிமிடங்களை உங்களால் உங்கள் நலனுக்கு ஒதுக்க முடியும் என்றால் சில வாரங்களிலேயே உங்கள் மன அழுத்தம் கட்டுக்குள் வந்துவிடும். அதோடு, அதைத் தூண்டும் ஹார்மோன்களின் எண்ணிக்கையும் படிப்படியாகக் குறைந்துவிடும். அப்படி மன அழுத்தம் விரட்டி ரிலாக்ஸ் ஆகும் எளிய வழிமுறைகளை பார்ப்போம்.

### மூச்சுப் பயிற்சி :

பதற்றத்தோடும் பரபரப்பாகவும் இருக்கும் அவசர நேரத்தில் நாம் எப்படி மூச்சுவிடுவோம் என்று கவனித்திருக்கிறீர்களா? மேலோட்டமாக விடுவோம் அல்லது மூச்சை இழுத்து நிறுத்துவோம். இப்படி மூச்சை ஆழமாகவிடாமல் நெஞ்சுவரை சுவாசிப்பது உடலுக்குப் பல பிரச்சனைகளை ஏற்படுத்திவிடும். இதற்கு சிறிய மூச்சு. (Short Breathing) என்று பெயர். நீங்கள் ஆழமாக மூச்சு இழுத்து, மெதுவாக வெளிவிட வேண்டும் மேலும் மூச்சு அடிவயிறுவரை இழுத்து விட வேண்டும். இதுவே சரியான மூச்சு (Deep Breathing) இதற்கான மூச்சுப்பயிற்சியை எப்படிச் செய்வது? அதிகாலையில் மூச்சுப்பயிற்சி செய்வது சிறந்தது. நேராக நிமிர்ந்து உட்கார்ந்து, கண்களை மூடிக்கொள்ளவும். கைகளை கோர்த்துக்கொள்ளவும் (சுக ஆசனம்), ஆழமாக மூச்சை இழுத்து (5 விநாடிகள்), மெதுவாக வெளியேவிடவும் (7 வினாடிகள்). இப்படிச் செய்யும்போது அடிவயிற்றின் அசைவுகளை உணரமுடியும். இதனால் கவனம் முழுவதும் அதில் குவிக்கப்பட்டு, உடலும் மனமும் உயிரும் தளர்வடைந்து இயல்புநிலையை அடையும். மேலும், இதய துடிப்பு சீராக இருப்பதால், ரத்த அழுத்தம் குறையும்; மனஅழுத்தம் நீங்கும். இந்த பயிற்சியை 5–ல் இருந்து 10 நிமிடங்களுக்குச் செய்யலாம்.

### தியானம் :

இது மூச்சு பயிற்சியின் அடுத்த நிலை. எளியவகை தியானங்கள் உதாரணமாக வேதாத்திரி மகரிஷியின் குண்டலினியோகம் மிகச்சிறந்த பயிற்சியாகும். எல்லோரும் அதனை எளிதில் கற்று வீட்டில் எப்போதும் செய்யலாம். தியானம் மன அமைதியையும், உண்மையான இறை நிலையினையும் அறிய நமக்கு உதவும். இதில் பல நிலைகள் இருந்தாலும் சிலவற்றை கற்று பயன்படுத்துவது மிகச்சிறந்த பயிற்சியாக அமையும்.

### காலையில் நடங்கள் :

வாரத்தில் குறைந்தது ஐந்து நாட்கள் காலையில் சுமார் 45 நிமிடங்கள் நடைபயிற்சி செய்யுங்கள். காலை வேளையில் வீசும் இதமான சில்லென்ற காற்று உங்கள் முகத்தில் படுவதை உணருங்கள். ஒவ்வொரு விடியலிலும் நாம் நடக்கும்போது இன்று புதிய நாள் என்று உணருங்கள். பேப்பர் போடும் சிறுவனின் சுறுசுறுப்பு. தூரத்து சுப்ரபாதம், எதிரே காலை வணக்கம் சொல்லி செல்லும் வாத்தியார், வருடி செல்லும் காலை பனி, பழக்கமானதால் குறைக்காத தெரு நாய், புதிய கண்ணீர் அஞ்சலி போஸ்டர், நாம் நடக்கும் எதிர் திசையில் வரிசை மாறாமல் பறந்து செல்லும் பறவைக் கூட்டம்

இவைகளை ரசித்தவாறே அதனை உணர்ந்து நடங்கள். 45 நிமிட நடை, உங்களிடம் உள்ள மன அழுத்தம் படிப்படியாகக் குறைய ஆரம்பிக்கும்.

**புன்னகை மருந்து :**

எப்போதும் சிரிக்கும் மன நிலைக்கு பழகிக்கொள்ளுங்கள், வள்ளுவர் சொன்னது போல் துன்பம் வரும் வேளையில் சிரிக்க தயங்காதீர்கள். ஏனெனில் ‘‘இந்த நிலை விரைவில் மாறிவிடும்’’. நகைச்சுவை சினிமாக்கள், வீடியோக்கள், காமெடிகளை பார்க்கலாம். உங்களுக்கு வயிறு வலிக்கும் அளவுக்கு சிரிப்பு மூட்டுபவர்களுடன் தொடர்ந்து உடையாடலாம். மொத்தத்தில் நீங்கள் சிரிக்க வேண்டும். அவ்வளவுதான். சிரித்து சிரித்தே மன உளைச்சலை அகற்றிவிட முடியும்.

**இசை கேளுங்கள் :**

இசையால் வசமாகாத இதயம் எதுவுமில்லை, வெறும் பாடல் வரிகள் மட்டும் அல்ல, மனதுக்கு உதவக்கூடிய மருத்துவ உண்மை. நாம் ரசித்துக்கேட்கும் மெல்லிய இசை, ரத்த அழுத்தத்தைக் குறைக்கும், இதயத் துடிப்பைச் சீராக்கும், பதற்றம், கவலைகளைக் குறைக்கும். இதை பல ஆய்வு முடிவுகளே சொல்லியிருக்கின்றன. எந்த மாதிரியான பதற்றத்தையும் தணித்து, மனதை அமைதிப்படுத்தும் சக்தி இசைக்கு உண்டு. இரவில் தூங்கும் முன் மெல்லிய இசையை கேட்பது நல்ல தூக்கத்திற்கு உதவும்.

**சங்கல்பம் :**

நம்மை நாமே உற்சாகப்படுத்திக்கொள்ள உதவும் சில பாசிட்டிவ் வாசகங்களை (சங்கல்பம்) உங்களுக்கு நீங்களே உருவாக்கிக்கொள்ளுங்கள். அல்லது உங்களுக்கு பிடித்த சிறந்த மேற்கோள்களை எழுதிவைத்துக்கொள்ளுங்கள். அதை உங்களுக்குள்ளேயே அடிக்கடி சொல்லிப் பாருங்கள். உதாரணமாக, ‘‘என்னால் முடியும்’’ ‘‘இந்த நிலை மாறிவிடும்’’ ‘‘நடப்பதெல்லாம் நன்மைக்கே’’ போன்ற வாசகமாக அது இருக்கலாம். இந்த வாசகங்களைத் திரும்பத் திரும்ப மனதுக்குள் சொல்லும்போது, மனதுக்கு சக்திதரும் மந்திரங்களாக அவை மாறும். மன அழுத்தம் குறையும். வாழ்விலும், அலுவலகத்திலும் வெற்றி கிட்டும்.

வாழ்த்துக்கள். அனைவருக்கும் நன்றி.

–முற்றும்.

<u>பணி ஓய்வு பெற்றனர் வாழ்த்துகிறோம்</u>

**கீழ்கண்ட பொறியாளர்கள் 31.12.2022 அன்று வாரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றனர். அவர்களை பொறியாளர் சங்கம் நீண்ட ஆயுள், நல்ல உடல்நலம், நிறைந்த மனநிம்மதியுடன் வாழ வாழ்த்தி மகிழ்கிறது.**

**ON SUPERANNUATION**

1. Er. T.Thennarasu. AEE / General cum MM / Central Office / Nagai. Nagai Branch. & 9443075806
2. Er. V.Subramani. AEE / O&M / South Thirupathur. Thirupathur Branch. & 9940943833
3. Er. A. Jesus William Baskar. AEE / Spl. Mtce. / Trichy EDC Metro. Trichy Branch. & 9443171767
4. Er. M.S.Srinivasan. AEE / Transmission / TANTRANSCO / Headquarters Branch. & 8667411033

**ON VOLUNTARY RETIREMENT**

Er. A.Rajeswari. JE / CDC Schemes / TANGEDCO / CDC Branch. 9940498638

## REC Ltd (Rural Electrification Corporation Ltd)

ரூரல் எலக்ட்ரிஃவிகேஷன் கார்ப்பரேசன் லிமிடெட் (REC Ltd) 1969 இல் நிறுவப்பட்டது. இது டெல்லியை தலைமையிடமாகக் கொண்டுள்ளது. இது இந்திய அரசின் மின்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்குகிறது.

இது இந்தியாவில் உள்ள கிராமபுற மின்மயமாக்கல் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கிறது மற்றும் மத்திய அல்லது மாநிலத்தின் மின் பயன்பாடுகள், மாநில மின்சார வாரியங்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் மின் உற்பத்தியில் ஈடுபடும் தனியார் துறைகளுக்கு கடன் வழங்குகிறது.

REC Power distribution company Ltd (RECPDCL) மற்றும் REC Transmission Project Company Ltd ஆகியவை REC லிமிடெட்டின் இரண்டு துணை நிறுவனங்களாகும் அவர்கள் விநியோகம் மற்றும் பரிமாற்ற சேவைகளில் ஆலோசனை சேவைகளை வழங்குகிறார்கள்.

REC 2022 ஆண்டின் கணக்கின்படி ரூ50000 கோடி சொத்து மதிப்புடன் நிகர லாபமாக ஆண்டுக்கு ரூ.10000 கோடி ஈட்டி வருகின்ற மகா நவரத்னா நிறுவனமாக சிறப்பாக இயங்கி வருகிறது.

REC 1969 இல் தேசத்தின் அவசரத் தேவைகளுக்காக கின் சேவைகளுக்காக உருவாக்கப்பட்டது. நமது நாட்டில் கடுமையான வறட்சியின் போதும், பருவ மழையை நம்பியிருப்பதை குறைக்கவும் நமது நாட்டின் தலைவர்கள் முயற்சி செய்தனர்.

அதன் பிறகு புதிய முயற்சிகள் செய்து மின் உற்பத்தி, பரிமாற்றம் அல்லது மின் விநியோகம் என அனைத்து பிரிவுகளிலும் மின் துறைக்கு நிதி உதவி வழங்குவதற்கு REC எல்லைகளை விரிவுபடுத்தியுள்ளது.

REC மின்சார அமைச்சகத்தின் கீழ் உள்ள மகா நவரத்னா நிறுவனம் ஆகும். இது வெளிநாட்டுக் கடன்களை தவிர, பத்திரங்கள் மற்றும் காலக்கடன்கள், உட்பட பல்வேறு முதிர்வுகளின் சந்தை கடன்களுடன் தங்களின் வணிகத்திற்கு நிதியளிக்கிறது.

உள்நாட்டில் RISIL, ICRA, IRRPL மற்றும் CARE ஆகியவற்றிலிருந்து அதிக கடன் மதிப்பீடுகளை REC வைத்திருக்கிறது. மற்றும் சர்வதேச அளவில் இறையாண்மை மதிப்பீட்டுக்கு **(Save Reign Ratings)** இணையாக மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அனைத்து ஊழியர்களின் தனிப்பட்ட திறைமைகளை திறம்பட பயன்படுத்திய உயர் தகுதி மற்றும் அனுபவம் வாய்ந்த நிபுணர்களின் விவேகமான தலைமையின் கீழ் 1998 ஆம் நிதியாண்டில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் நிலையான லாப வரம்புகள் மற்றும் ஈவுத்தொகைகளை பராமரித்து வருகிறது. (ரூ. 50000 கோடி மார்ச்31, 2022 நிலவரப்படி)

**REC**யின் எளிமையான தொடக்கங்கள் கார்ப்பரேட் உலகில் நல்ல முன்னேற்றங்களை முன்னெடுத்துச்சென்றன. இன்றுவரை தேசத்தை கட்டி எழுப்புவதற்கான அர்ப்பணிப்பு இதன் முக்கிய மதிப்பாக உள்ளது. இயற்கையாகவே இந்திய அரசின் முதன்மை திட்டங்களுக்கான நோடல் ஏஜன்சியாக REC நியமிக்கபட்டுள்ளது.

மேலும் பிரதான மந்திரி சஹாஜ் பிஜ்லி ஹர் கர் யோஜனா (SAUBHAGAYA), தீன் தயாள் உபாத்யாய கிராம் ஜோதி யோஜனா (DDUGJY) மற்றும் தேசிய மின்சார நிதியம் (NEF) மேலும் PFC, உடன் REC ஆனது புதுப்பிக்கப்பட்ட விநியோகத் துறை திட்டத்திற்கான (RDSS) நோடல் ஏஜென்சியாகவும் நியமிக்கப்பட்டுள்ளது.

தவிர ஆனது உஜ்வால் டிஸ்காம் அஷ்யூரன்ஸ் யோஜனா (UDAY) ஐ கண்காணிப்பதில் மின் அமைச்சகத்திற்கு உதவுகிறது. இது நாட்டின் மின் விநியோக நிறுவனங்களை செயல்பாட்டு சீர்திருத்தம் மற்றும் நிதி ரீதியாக மாற்ற முயல்கிறது,

RECஇன் துணை நிறுவனமாக RECPDCL (REC பவர் டெவலப்மண்ட் அண்ட் கன்சல்டன்சி லிமிடெட்) விநியோகம் மற்றும் தொடரமைப்பு துறைகளில் ஆலோசனை சேவைகளை வழங்குவதன் மூலம் REC இன் பகிரப்பட்ட பணியை உணர அதனுடன் இணைந்து செயல்படுகிறது.

அலுவலகங்கள் மூலம் அர்பணிப்புடன் கூடிய ஊழியர்களின் மூலம் சேவை செய்து வருகிறது. நாட்டின் மொத்த மின் திறனில் தங்களின் பங்கை வலுப்படுத்தியன் மூலம் மலிவு விலையில், அணுகக்கூடிய மற்றும் நிலையான மின்சாரத்தை வழங்குவதற்கு ஒரு நல்ல உள் கட்டமைப்பை உருவாக்கி வருகிறது.

## REC இன் பணிமற்றும் பார்வை

விரைவான வளர்ச்சிக்கும், கிராமப்புற மற்றும் நகர்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக மின்சாரம் கிடைப்பதை எளிதாக்குதல்.

நாட்டில் மின் உற்பத்தி, மின் சேமிப்பு, மின் பரிமாற்றம் மற்றும் மின்விநியோக வலையமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய திட்டங்களுக்கு நிதியளித்து ஊக்குவிப்பதற்காக போட்டி, வாடிக்கையாளர் நட்பு மற்றும் வளர்ச்சி சார்ந்த அமைப்பாக செயல்படுவது.

## REC இன் நோக்கங்கள்

1. ஒருங்கிணைந்த அமைப்பு மேம்பாடு, மின் உற்பத்தி பரவலாக்கப்பட்ட மற்றும் மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் ஊக்குவித்தல், ஆற்றல் சேமிப்பு, புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு, பம்ப்செட் ஆற்றலை மையமாகக்கொண்ட மின் விநியோகம் தீனதயாள் உபாத்யாயா கிராம ஜோதி யோஜனா செயல்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட திட்டங்களை ஊக்குவித்து நிதியளித்தல் ஒரு கிராமப்புற மின்சார உள்கட்டமைப்பு மற்றும் வீட்டு மின்மயமாக்குதலுக்கான இந்திய அரசின் திட்டம்.

2. பரவலாக்கப்பட்ட மின் உற்பத்தி திட்டங்களுக்கு நிதியளித்தல், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை பயன்படுத்துதல். ஆலோசனைச் சேவைகள் பரிமாற்றம், துணைப் பரிமாற்றம் மற்றும் விநியோக முறைகள் புதுப்பித்தல், நவினமயமாக்கல் மற்றும் பராமரித்தல் போன்ற பிற தொடர்புடைய பகுதிகள் மற்றும் செயல்பாடுகளை விரிவுபடுத்துதல் மற்றும் பல்வகைப் படுத்துதல், தொலை தூர, மலை, பாலைவனம், பழங்குடியினர், ஆற்றங்கரை மற்றும் பிற கடினமான தொலைப்பகுதிகள் உள்ளிட்ட கிராமப்புற மற்றும் நகர்புறங்களுக்கு மின்சார வழங்குவதில் நம்பகத்தன்மை.

3. உள்நாட்டு மற்றும் சர்வதேச நிறுவனங்களிடமிருந்து நிதி திரட்டுதல் மற்றும் மாநில மின்சார வாரியங்கள் நிதி திரட்டுமல் மற்றும் மாநில மின்சார வாரியங்கள் மின் பயன்பாடுகள், மாநில அரசுகள், கிராமப்புற மின்சார கூட்டுறவுகள் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தனியார் மின் உற்பத்தியாளர்களுக்கு கடன் வழங்குதல் உட்பட பல்வேறு ஆதாரங்களில் இருந்து நிதி திரட்டுதல்.

4. பெரு நிறுவன இலக்குகளை பூர்த்தி செய்யும் போது அதன் செயல்பாடுகளுக்கான பொருளாதார மற்றும் நிதி வருவாய் விகிதத்தை மேம்படுத்துதல் (1) மின் உள்கட்டமைப்பை அமைத்தல் (2) மின் சுமை மேம்பாடு (3) கிராமப்புற மற்றும் நகர்புறங்களின் விரைவான சமூக பொருளாதார வளர்ச்சி மற்றும் (4) தொழில் நுட்பத்தை மேம்படுத்துதல்.

5. வாடிக்கையாளரின் திருப்தியை உறுதி செய்தல் மற்றும் வாடிக்கையாளரின் நலன்களைப் பாதுகாத்தல், பரஸ்பர நம்பிக்கை மற்றும் சுய மரியாதை மூலம் நிறுவனம் மற்றும் வணிகப் பங்காளிகளுடன் செயல்பாடுகளில் தொடர்ச்சியான முன்னேற்றம் மற்றும் தேவையான சேவைகளை வழங்குதல்.

6. மாநில மின்சார வாரியங்கள் / மின்சாரப் பயன்பாடுகள் / மாநில அரசுகள், கிராமப்புற மின் கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் பிற கடன் பெறுபவர்களுக்கு தொழில்நுட்ப வழிகாட்டுதல்கள், ஆலோசனை சேவைகள் மற்றும் கடன் பெறுபவர்களுக்கு தொழில்நுட்ப வழிகாட்டுதல்கள், ஆலோசனை சேவைகள் மற்றும் பயிற்சி வசதிகளை வழங்குவதன் மூலம் பொருளாதார ரீதியாகவும், நிதி ரீதியாகவும் லாபகரமான திட்டங்களை இந்தியாவின் வளர்ச்சியை விரைவுபடுத்துதல்.

## REC ஆல் நிதியளிக்கப்பட்ட பல்வேறு வகையான திட்டங்கள் பின்வருமாறு

### தலைமுறை திட்டங்களுக்கான கடன்

1. நிலக்கரி சுரங்கங்களின் வளர்ச்சி போன்ற தொடர்புடைய பகுதிகளுடன் வழக்கமான ஆற்றல் மூலங்கள், அதாவது வெப்பம், எரிவாயு ஆகியவற்றின் அடிப்படையில் புதிய மின் உற்பத்தி நிலையங்களை அமைத்தல்.
2. வழக்கமான ஆற்றல் ஆதாரங்களின் அடிப்படையில் தற்போதுள்ள மின் உற்பத்தி நிலையங்களை

புதுப்பித்தல் மற்றும் நவீனமயமாக்கல் (R&M)

3. சூரிய, காற்று, சிறிய நீர், உயிரி, நீர் உற்பத்தி திட்டங்கள் போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களின் அடிப்படையில் மின் உற்பத்தி நிலையங்களை அமைத்தல்.

**பரிமாற்ற திட்டங்களுக்கான கடன் :**

புதிய மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து மின்சாரத்தை வெளியேற்றுதல் மற்றும் நியமிக்கப்பட்ட பகுதிகளில் ஏற்கனவே உள்ள பரிமாற்ற அமைப்பை வலுப்படுத்துதல் / மேம்படுத்துதல்.

**விநியோக திட்டங்களுக்கான கடன்**

1. நியமிக்கப்பட்ட பகுதிகளில் மின் துணை பரிமாற்றம் மற்றும் விநியோக முறையை வலுப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்.
2. கிராமப் புறங்களில் குறைந்த மின்னழுத்த விநியோக அமைப்பை உயர் மின்னழுத்த விநியோக அமைப்பாக மாற்றுவது,
3. T&D அமைப்புகளை வலுப்படுத்த / மேம்படுத்துவதற்கான உபகரணங்கள் மற்றும் பொருட்களை வாங்குதல் ஏற்கனவே மின்மயமாக்கப்பட்ட கிராமங்களில் உள்ள கிராமப்புற நுகர்வோருக்கு இணைப்புகளை வழங்குவதற்கான தீவிர சுமை மேம்பாடு,
4. விவசாய பம்ப் செட்டுகளுக்கு சக்தி அளிக்கும் வகையில் மின் உள்கட்டமைபுகளை அமைத்தல்

**குறுகிய கால கடன்கள் / நடுத்தர கால கடன்கள்**

மின் உற்பத்தி நிலையங்களுக்கு எரிபொருள் வாங்குதல், மின்சாரம் வாங்குதல், பொருள் மற்றும் சிறிய உபகரணங்களை வாங்குதல், மின் மாற்றிகளை பழுது பார்ப்பது உட்பட அமைப்பு மற்றும் நெட்வொர்க் பராமரிப்பு போன்ற நோக்கங்களுக்கான செயல்பாட்டு மூலதனத் தேவைகள்.

**REC 2022-23 ஆண்டிற்கான பெற்ற விருதுகள் :**

❖ கார்பரேட் நிர்வாகத்தில் சிறந்து விலங்கியதற்காக கோல்டன் பீகாக் விருது 2022

❖ Exchange 4 Media வழங்கும் பெண்கள் சாதனையாளர் விருதுகள் 2022 இல் பெண்கள் அதிகாரமளித்தலுக்கான சிறந்த அமைப்பு விருது

❖ குவாண்டிக் இந்தியா வழங்கும் சிறந்த பொதுத்துறை ஐடி திட்டம் விருது

❖ சிறந்த நவரத்தினத்திற்கான டன் & பிராட்ஸ்ட்ரீட் விருது

❖ டன் & பிராட்ஸ்ட்ரீட் விருது சிறந்த பொதுத்துறை நிறுவனம் – நிதிச் சேவைகள் பிரிவு

❖ டைட்டன் பிசினஸ் விருது 2022 – பிரிமியர் நிதி நிறுவனம் ஆண்டின் வேகமாக வளரும் நிறுவனம் வகை

❖ டைட்டன் பிசினஸ் விருது 2022 – பிரிமியர் நிதி நிறுவனம் நிதிச் சேவைகள் வகை

**REC இன்ஸ்டிடியூட் ஆஃப் பவர் மேனேஜ்மென்ட் & டிரெய்னிங் (RECIPMT)**

1979இல் REC ஹைதராபாத்தில் ஒரு தேசிய பயிற்சி நிறுவனத்தை நிறுவியது. இது மாநில மின்சார வாரியங்கள், விநியோக நிறுவனங்கள், கிராமப்புற மின்சார கூட்டுறவு மற்றும் பிற மின் பயன்பாடுகளில் தொழில்நுட்ப நிர்வாகத்திறன் மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் மேலும் உள்நாட்டில் நடத்துவதற்கும் REC ஊழியர்களுக்கான பயிற்சி திட்டங்கள். CIRE ஆனது கிராமப்புற மின்மயமாக்கல் மற்றும் கிராமப்புற ஆற்றல் மேம்பாடு ஆகியவற்றின் பொதுவான இலக்கை நோக்கி மற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொள்வதற்கான ஒரு தளமாகவும் செயல்படுகிறது,

R. **சந்தோஷ்குமார்,** ME, MCA, MBA
வெளியீட்டுச் செயலாளர் / மின் அலை

## உடலைத் தளர்த்துவதற்கான பயிற்சிகள்

**1. மெல்லோட்டம் :** நேராக நின்று கைமுஷ்டிகளைத் தளர்வாக மார்புக்கு மேல் வைக்கவும். முன்கால் விரல்களால் ஒரே இடத்திலேயே ஓட ஆரம்பித்துக்குதிகால்கள் உடலின் பின்புறம் தொடுமாறு மெதுவாக ஓடவும்.

- ❖ வேகத்தை சீராக அதிகப்படுத்தி ஒரே அளவான ஓட்ட வேகத்தை அடைய வேண்டும்.
- ❖ ஆழ்ந்த சீரான மூச்சோடு ஓட்டத்தின் போதே உடலைத் தளர்வாக வைக்கவும். ஓட்டத்தை சிறிது நேரம் தொடரவும்.
- ❖ இந்த நிலையிலிருந்தே முழங்கால்களை, மார்புவரை உயர்த்தி முன்புறமாக ஓட ஆரம்பிக்கவும். இதை சிறிது நேரம் தொடரவும்.
- ❖ பயிற்சியைப் பக்கவாட்டில் தொடரவும் பாதங்கள் இரு பக்கவாட்டிலும் உயறுமாறு முழங்கால் வரை மடித்து ஓடவும் பின் மெதுவாக ஒட்டத்தை நிறுத்தி 'முக தௌத்தி' செய்யவும் நேராக நின்று உடலைத் தளர்த்தவும் (குடாசனம்)

**2. முக தௌத்தி** (வேகமான ஒரே சுவாத்தின் மூலம் சுத்தப்படுத்தும் முறை)

- ❖ உடம்பை சிறிது முன்னுக்கு வளைத்து கைகளைத் தொடைகளின் மீது ஊன்றி நிற்கவும். கால்களுக்கு இடையில் ஒரு மீட்டர் இடைவெளி விட்டு நிற்கவும்.
- ❖ ஆழமாக மூச்சை உள்ளிழுத்துப் பின் வாய் வழியாகக் காற்றை வேகமாக வெளியேற்றவும். உதரவிதானத்தின் துணை கொண்டு நீளமாக மூச்சு விடவேண்டும்.
- ❖ பலமுறை தொடர்ந்து செய்யவும்.

**3. கணுக்கால்களைத் தளர்த்துதல்**

- ❖ நேராக நிற்கவும்
- ❖ மூச்சை உள்ளழுத்துக் கொண்டே இருகைகளையும் முன்புறமாக நீட்டி உயர்த்தவும்
- ❖ அதே நேரத்தில் கால் நுனிவிரல்களின் மீது நிற்கவேண்டும்.
- ❖ மூச்சை வெளியேற்றிக்கொண்டே கைகளையும், கால்களையும் ஒரே சமயத்தில் கீழே கொண்டு வரவும்.

**4. முழங்கால்களைத் தளர்த்துதல்**

- ❖ இரு கைககளையும் தொங்கவிட்டு நேராக நிற்கவும் முழுவதுமாக மூச்சை உள்ளழுத்துக் கொள்ளவும்
- ❖ மூச்சை வெளியேற்றிக்கொண்டே முழங்கால்களை பிரியாமல் முழங்கால் மூட்டுகளை வளைத்து கீழே உட்காரவும்
- ❖ இடுப்பை வளைக்காமல் உடம்பை நேராக வைத்துக்கொண்டே இதைச்செய்யவும்
- ❖ மூச்சை உள்ளிழுத்துக்கொண்டே மேலே எழும்பவும்

**5. இடுப்பை (மூட்டை)த் தளர்த்துதல்**

- ❖ நேராக நின்று மூச்சை உள்ளிழுத்துக் கொள்ளவும்.
- ❖ முழங்கால்களை முடிந்தவரை பிரித்து அதேசமயம் பாதங்கள் ஒன்றையொன்று தொட்டுக்கொண்டிருக்குமாறு மூச்சை வெளியேற்றிக் கொண்டே உட்காரவும்

..தொடரும்...

பொர். G. **கார்த்திகேயன்** / பொதுப்பொருளாளர்

# கண்ணீர் அஞ்சலி

03.01.2023 பொா்.**V.** உமாபதி, இளநிலை பொறியாளா் இரண்டாம் நிலை/ 110/ 33 –11 கே.வி. இருங்காட்டுக்கோட்டை து.நி. செங்கல்பட்டு கிளை **அவர்கள்.**

07.01.2023 பொா்.P. கல்யாணி, உதவிப் பொறியாளா் / O&E / MTPS1 **அவர்கள்**,

17.01.2023 பொா்.வி. நாகராஜன், உதவி செயற்பொறியாளா் /கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு கிளை அவா்கள்.

**மறைவிற்கு பொறியாளர் சங்கம் கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறது. பொறியாளரை இழந்து வாடும் குடும்பத்திற்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துகொள்கிறது.**

30.12.2022 பொா்.A.கார்த்திகேயன், TA / O&E / MTPS1, அவா்களின் **தந்தையார்.** 9047571611

05.01.2023 பொா்.P.ராமச்சந்திரன், இளநிலை பொறியாளா் முதல் நிலை/M/O&E/TTPS கிளை அவா்களின் **தந்தையார்.** 9444275570

05.01.2023 பொா்.**P.**செந்தில்குமார், தொழில்நுட்ப உதவியாளா்/MRT/ தஞ்சை கிளை அவா்களின் **தாயார்.** 9952526903

08.01.2023 பொா்.**F.**சுப்பிரமணியன், உதவி மின் பொறியாளா்/ செங்கோட்டை துணை மின்நிலையம் திருநெல்வேலி கிளை அவா்களின் **தாயார்.** 7598028298

08.01.2023 பொா்.**P.**சீனிவாசன், உதவி செயற் பொறியாளா் /இ&ப/ வடகாத்திபட்டி திருப்பத்தூா் கிளை அவா்களின் **தந்தையார்.**9486529396

08.01.2023 பொா்.**K.**அழகன், கிளைப் பொருளாளா் / கள்ளக்குறிச்சி கிளை, இளமின் பொறியாளா்/ இ&ப/ நாகலூா் அவா்களின் **தாயார்** 9787745726.

12.01.2023 பொா்.**R.**பாபு உதவி செயற்பொறியாளா்/ ஒரகடம், செங்கல்பட்டு கிளை அவா்களின் **தாயார்.**8754414200

12.01.2023 பொா்.N.காந்திமதி. இளமின் பொறியாளா்/பண்டக நிா்வாகம்/ திருநெல்வேலி கிளை அவா்களின் **தாயார்.** 9486957543

24.01.2023 பொா்.N.உமாமேகஸ்வரி, உதவி செயற்பொறியாளா் / CM2 / MTPS1, கிளை அவா்களின் **தாயார்.** 9953375799

**ஆகியோர் இயற்கை எய்தினார்கள், குடும்பத்தினரை இழந்து வாடும் பொறியாளர்களுக்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.**

**In matters of truth and justice, there is no difference between large and small problems, for issues concerning the treatment of people are all the same.**

**- Albert Einstein**



2023 வருட புத்தாண்டை முன்னிட்டு நமது பொறியாளர் சங்க பொறுப்பாளர்கள்
மரியாதை நிமித்தமாக இயக்குனர்/நிதி (தொடரமைப்பு) அவர்களை சந்தித்து வாழ்த்து கூறினர்




2023 வருட புத்தாண்டை முன்னிட்டு நமது பொறியாளர் சங்க பொறுப்பாளர்கள்
மரியாதை நிமித்தமாக இயக்குனர்/பகிர்மானம் அவர்களை சந்தித்து வாழ்த்து கூறினர்



2023 வருட புத்தாண்டை முன்னிட்டு நமது பொறியாளர் சங்க பொறுப்பாளர்கள்
மரியாதை நிமித்தமாக வாரிய செயலாளர் அவர்களை சந்தித்து வாழ்த்து கூறினர்

MIN ALAI - January - 2023 RNI No. TNBIL / 2012 / 47622
Printed Book Periodical



2023 வருட புத்தாண்டை முன்னிட்டு நமது பொறியாளர் சங்க பொறுப்பாளர்கள் மரியாதை நிமித்தமாக மின்வாரியதலைவர் அவர்களை சந்தித்து வாழ்த்து கூறினர்



TTPS கிளையின் சங்க உறுப்பினர் மறைந்த பொறி. N. ராமானுஜம் / JE அவர்களது காமதேனு நலநிதி பணப்பயன் Rs.3,00,000/-க்கான காசோலை அவரது குடும்பத்தாரிடம் பொறியாளர் சங்கம் சார்பில் 03.01.2023 அன்று தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கத்தின் அமைப்புச் செயலாளர் அவர்களால் வழங்கப்பட்டது. உடன் சங்க பொறுப்பாளர்கள்.



Published by : V.S. Sampathkumar, General Secretary on behalf of
Tamil Nadu Electricity Board Engineers' Sangam, # 144, Anna Salai, Chennai - 600 002.
Printed by : T.P. Kumar Gupta at T.P. Offset Printers, Old No. 15/1, New No. 18,
Amman Koil St,1st Lane, Kondithope, Chennai - 600 079. Edited by : R.Santhosh Kumar